# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,897—1970 මාර්තු 13 වැනි සිකුරාදා—1970.3.13

14,897 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு மாச்சு மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வோரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 171 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 173 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 175 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 184 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 175 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 81

எண். 21/ஆர்ஈசிரி/381

### தரைப்படை—நிரந்தரப்படை—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதிஉத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் தரைப்படையின் நிரந்தரப்படையில் இருந்து 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இளைப்பாறுகிறார் :—

லெவ்ரினன்ற் கேணல் பெல்லனகே பேர்சி பர்ணந்து ஜயரதன, சீ.ஏ.ஜி.எஸ்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 மாச்சு 2.

3–127

1970 இன் இல. 82

எண். டி./விஎவ்/34(பீ)

### தரைப்படை—இலங்கை தொண்டர் படை—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை உறுதிப்படுத்தலும் பதவி உயர்ச்சியும்

1970 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து கப்ரின்களாகக் கடவர் :

லெவ்ரினன்ற் (தற்காலிக கப்ரின்) ரவீந்திர விகால் ஜயவர்த்தன, சி.எல்.ஐ.

லெவ்ரினன்ற் செம்பகுட்டிஆரச்சிகே பெனடிக்ற் கேபிரியல் த சில்வா, சி.எல்.ஐ.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

கொழும்பு,
1970, பெப்புருவரி 27.

3–125

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

1970 இன் இல. 83

எண். டி/விளப்/38 (III)

## தரைப்படை—இ. தொ. ப.—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வுகளும் பிரிவுகளுக்கான மாற்றங்களும்

கீழ்க்குறிப்பிடப்படும் கனவான்கள் கீழ்க் காட்டப்படும் முதுமுறை வரிசைப்படி தரைப்படையின் தொண்டர் படையில் 1970, சனவரி மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இரண்டாம் லெவ்ரினன்ற்களாக அரசாணை அமர்வு பெறுவதையும் அவரவர் பெயர்களுக்கு மேல் குறிப்பிடப்படும் பிரிவுகளுக்கு அவ்வவர்கள் நியமிக்கப்படுதலையும் அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலர் அங்கீகரிப்பதில் மகிழ்வடை கிறார் :

அ. **அரசாணை அமர்வு**

திரு. தொன் ஷெல்ரன் கனிசியஸ் கனேகொட.
திரு. அனில் சுமேத அமரசேகர.
திரு. ரன்பட்டபெண்டிகே நிகால் வீரவர்ண நிலவீர.
திரு. குருவகங்கானகே பிரேமலால் நந்த பர்ணந்து.

ஆ. **மாற்றம்பெற நியமிக்கப்படும் பிரிவுகள்**

**2 வது (தொண்டர்) படைப்பிரிவு, இலங்கை சிறு காலாட்படை**

இரண்டாவது லெவ்ரினன்ற் குருவகஙகானகே பிரேமலால் நந்த பர்ணந்து.

**2 வது (தொண்டர்) படைப்பிரிவு, இலக்கை சிங்கப் பேரணி**

இரண்டாவது லெவ்ரினன்ற் ரன்பட்டபெண்டிகே நிகால் வீரவர்ண நிலவீர.

**2 வது (தொண்டர்) படைப்பிரிவு, கெமுனு காவற்படை**

இரண்டாவது லெவ்ரினன்ற் அனில் சுமேத அமரசேகர.

**இலங்கை இராணுவ சேவைப் படை (தொண்டர்)**

இரண்டாவது லெவ்ரினன்ற் தொன் ஷெல்ரன் கனிசியஸ் கனேகொட.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 பெப்புருவரி 26.

3–91

---

1970 இன் இல. 84

எண். டி 202/ஆர்ஈசிரி

## இலங்கை அரச கடற்படை—நிரந்தரப் படை—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்ச்சி

1970, மார்ச்சு மாதம் 16 ஆம் திகதியிலிருந்து கொமொடோர் ஆகக் கடவர் :

கப்ரின் டொனல்ட் விக்ரர் ஹன்ரர், இலங்.அ.க.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 மார்ச்சு 3.

3–128/1

---

1970 இன் இல. 85

எண். டி. 202/ஆர்ஈசிரி

## (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்

அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலர் (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின் கீழ் 1970, மார்ச்சு மாதம் 16 ஆம் திகதியிலிருந்து கடற்படையின் தளபதியாக பதிற்கடமையாற்றுமாறு கொமொடோர் டொனல்ட் விக்ரர் ஹன்ரர், இலங்.அ.க., அவர்களை நியமித்தலில் மகிழ்வடைந்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

கொழும்பு,
1970 மார்ச்சு 3.

3–128/2

---

1970 இன் இல. 86

எண். டி. 252/ஆர்ஈசிரி/3.

## இலங்கை அரச ஆகாயப்படை—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதிஉத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பதிவி உயர்ச்சிகள்

1970, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து " ஸ்குவாட்றன் லீடர் " களாகக் கடவர் :—

ஃபிளைற் லெவ்ரினன்ற் கொளுவ மரக்கலகே உபாலி த சில்வா (01062) பரிபாலனம்.

ஃபிளைற் லெவ்ரினன்ற் ஜோசெப் பராராஜசிங்கம் இளையதம்பி (01063) தொழில்நுட்ப/சைகை.

ஃபிளைற் லெவ்ரினன்ற் பயாகலகே நொஎல் சரணபால பர்ணந்து (01065) செயல்/வான்.

ஃபிளைற் லெவ்ரினன்ற் ஜோசெப் திமொதி றெக்ஸ் பர்ணந்து (01066) பரிபாலனம்.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 பெப்புருவரி 26.

3–92

---

1970 இன் இல. 87

எண். 252/ஆர்ஈசிரி/3

## இலங்கை அரச ஆகாயப்படை—அரசாங்கத்தினை நிருவகிக்கும் அதி உத்தம அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்ச்சிகள்

1970, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து தற்காலிக " ஸ்குவாட்றன் லீடேர்ஸ் " ஆகக் கடவர் :

ஃபிளைற் லெவ்ரினன்ற் அலென்சிஸ் பிறெண்டன் சோசா (01073) பரிபாலனம்/றெஜிமென்ற்.

ஃபிளைற் லெவ்ரினன்ற் அன்ரனி வில்லியம் ஜோசெவ் (01075) பரிபாலனம்/ஈ.டி.

ஃபிளைற் லெவ்ரினன்ற் டொமிங்கு சரத் குணசிறி விதான (01076) பரிபாலனம்/ஈ.டி.

ஃபிளைற் லெவ்ரினன்ற் நூர் றஹீம் றஹீம் (01080) ஜீடி/பீ.

ஃபிளைற் லெவ்ரினன்ற் பத்தபன்டிகே பிறெட் சிறிபால ஜயசூரிய (01082) பரிபாலனம்.

ஃபிளைற் லெவ்ரினன்ற் சாக்யசேன அத்துகோறல (01087) தொழில் நுட்ப/எஞ்ஜி.

அதி உத்தமனரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, மார்ச்சு 2.

3–129

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 88

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற் படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. சி. அமெரசிங்க .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, ஹோமகமவில் | 1970 மார்ச் 4 லிருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. ரி. எஸ். டீல் .. .. | மேலதிக நீதவான் முதலியன, அம்பாந் தோட்டை | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. எம். எஸ். எஸ். கொரியா இல் லாத காலஙகள் |
| திரு. எச். பி. பெரெரா .. | மேலதிக நீதவான் முதலியன, குருணு கலே | 1970 மார்ச் 3 லிருந்து 5 வரை | திரு. கே. வி. சுவர்ணுதிபதி இல்லாத காலங்கள் |
| திரு. எம். ஓ. எம். தாகிர் .. | குருணுகலே மேலதிக நீதவான் முதலியன, மாகோவில் | 1970 மார்ச் 4 ம் 5 ம் | திரு. டபிள்யு. என். எஸ். விஜெரட்ண இலலாத காலங்கள் |
| திரு. எம். ஜே. பீரிஸ் .. | மேலதிக நீதவான் முதலியன, பதுளை | 1970 மார்ச் 14 லிருந்து 18 வரை | திரு. எஸ். ஜே. டி. டீ. எஸ். விஜய ரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. டி. சேரசிங்க .. .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, தங்காலே | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. ஜி. சி. டபிள்யு. டீ. சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. பி. விஜயரட்ணம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நுவரேலியா | 1970 மார்ச் 2 ம் 3 ம் | திரு. எம். சண்முகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. சி. எம். எல். டீ சில்வா .. | ஷை .. .. | 1970 மார்ச் 3 லிருந்து 6 வரை | திரு. ஜே. பி. சி. சுவரிஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எச. எஸ். ஏ. பெரெரா .. | குருணுகலே மேலதிக நீதவான், குளியப் பிட்டி முதலிய இடங்களில் | 1970 மார்ச் 3 லிருந்து 10 வரை | திரு. டி. எஸ். பி. ஆர். சேனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. ஈ. வி. கருணரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, நீர்கொழும்பு | 1970 மார்ச் 1 .. | திரு. வி. என். ஏ. டபிள்யு. விக்ரம சூரிய இல்லாத காலம் |
| திரு. ஜே. எல். பெர்னுன்டோபுள்ளே .. | ஷை .. .. | 1970 மார்ச் 4 ம் 5 ம்.. | ஷை |
| திரு. ரி. ஆசீர்வாதம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, இரத்தினபுரி | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. பி. ஈ. டீ சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சிவகுருநாதன் .. | மேலதிக விண்ணப்ப நீதிமன்ற ஆணை யாளர் முதலியன, கொழும்பு .. | 1970 மார்ச் 1 .. | திரு. என். தெவேந்திரா இல்லாத காலம் |
| திரு. பி. ஈ. வி. பொட்டேஜு .. | ஷை .. .. | 1970 மார்ச் 4, 5 .. | திரு. சி. ஈ. மென்டிஸ் இல்லாத காலம் |
| திரு. எம். எம். விஜசூரிய .. | ஷை .. .. | ஷை .. | திரு. ஜி. எவ். எச். அதுறுபான இல்லாத காலங்கள் |
| திரு. எச். ஈ. எஸ். விக்ரமரட்ண .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, நாரஎன்பிட்டியில் | 1970 மார்ச் 4, 5 .. | திரு. ஏ. சைமன்சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. ஆர். விக்ரமசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, காலி .. | 1970 மார்ச் 4 லிருந்து 8 வரை | திரு. எல். எச். ஜி. வீரசேகர இல்லாத காலஙகள் |
| திரு. எஸ். எம். எம். காசிம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, புத்தளம் | 1970 பெப்ருவரி 26, 27 | திரு. கே. பாலகிட்ணர் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். எம். எம். காசிம் .. | ஷை .. .. | 1970 மார்ச் 3 லிருந்து 7 வரை | ஷை |
| திரு. டி. சென். ஈ. அமெரசிங்க .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, அவிசாவலே | 1970 மார்ச் 4, 5 .. | — |
| திரு. டி. சென். ஈ. அமெரசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, அவிசா வலே | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் இல்லாத காலங்கள் |
| திரு. டி. ஆர். ஜயக்கொடி .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, குருணுகலே | 1970 மார்ச் 4 லிருந்து 6 வரை | திரு. ரி. ஜே. ருஜரட்ணம் இல்லாத காலங்கள் |
| திரு. கே. வி. நடருஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பதுளை | 1970 மார்ச் 2 லிருந்து 9 வரை | திரு. ரி. டி. ஜி. டீ அல்விஸ் இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. ஈ. பெரேரா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கம்பக | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. கே. ஏ. பி. ரணசிங்க இல்லாத காலங்கள் |
| திரு. ஈ. எஸ். மார்டின் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கண்டி | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. எஸ். ஜே. எம். ஜி. எஸ். முத ணுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஞானச்சந்திரன் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பருத்தித்துறை | 1970 பெப்ருவரி 26, 27 | திரு. சி. எம். தர்மலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஞானச்சந்திரன் .. | ஷை .. | 1970 மார்ச் 3 லிருந்து 5 வரை | ஷை |
| திரு. ரி. குணரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பாணந்துறை | 1970 மார்ச் 4, 5 .. | திரு. எம். எம். அப்துள்காதர் இல் லாத காலங்கள் |
| திரு. என். ஜே. வி. கூரே .. | மேலதிக நீதவான் முதலியன, கொழும்பு | 1970 மார்ச் 4, 5 | திரு. ஈ. எவ். டீ சில்வா, திரு. ஆர். எல். டீ சில்வா இலாத காலங்கள் |
| திரு. எச். ஈ. விஜதுங்க .. | ஷை .. .. | ஷை .. | திரு. என். பி. டி எஸ். விஜசேகர இல்லாத காலங்கள் |
| திரு. டபிள்யு. டி. பெரரா .. | ஷை .. .. | ஷை .. | திரு. ஈ. ஏ. விஜயகுலசூரிய இல்லாத காலங்கள் |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஜே. எஸ். ராஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்—புத்தளம் | 1970 மார்ச் 3 லிருந்து 10 வரை | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ராஜபக்ச .. | ஷை .. .. | 1970 யூன் 7 .. | ஷை |
| திரு. எஸ். கனகரட்ணம் .. | மேலதிக நீதவான் முதலியன, யாழ்ப்பாணம் | 1970 மார்ச் 2 லிருந்து 8 வரை | திரு. ஜே. ஜே. எவ். ஏ. டயஸ் இல்லாத காலங்கள் |
| திரு. எவ். டபிள்யு. குணரட்ண .. | மேலதிக நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1970 பெப்ருவரி 27 லிருந்து மார்ச் 1 வரை | திரு. பி. பி. நம்புக்வெல்ல இல்லாத காலங்கள் |
| திரு. டி. சி. ஈ. வி. கருணரட்ண .. | ஷை .. .. | 1970 மார்ச் 3 லிருந்து 6 வரை | ஷை |
| திரு. ரி. எஸ். பி. டீ. எஸ். குணசேகர .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, பலப்பிட்டி | 1970 மார்ச் 13 .. | திரு. எல். எச். டீ அல்விஸ் இல்லாத காலம் |
| திரு. வி. யு. பெர்ணன்டோ .. | மேலதிக நீதவான் முதலியன, களுத்துறை | 1970 மார்ச் 4, 5 .. | திரு. டபிள்யு. ஜி. என். வீரரட்ண இல்லாத காலங்கள் |
| திரு. சி. தியாகராஜா .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி, மாத்தளை முதலிய இடங்களில் | 1970 பெப்ருவரி 22 .. | திரு. எஸ். செல்லையா இல்லாத காலம் |
| திரு. எல். டபிள்யு. பெர்ணன்டோ .. | கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கம்பளை | 1970 மார்ச் 3 லிருந்து 9 வரை | திரு. எல். ஏ. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஈ. கதிர்காமலிங்கம் .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, யாழ்ப்பாணம் | ஷை .. | திரு. ஐ. எம். இஸ்மாயில் இல்லாத காலங்கள் |
| திரு. டி. பி. என். ஜயதிலக்க .. | மேலதிக நீதவான் முதலியன, பாணந்துறை | 1970 மார்ச் 4 லிருந்து 8 வரை | திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா இல்லாத காலங்கள் |
| திருமதி எஸ். கருணரட்ண .. | சீயன்னக் கோறளை கிழக்கு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 பெப்ருவரி 15, 16 | திரு. டபிள்யு. பி. தசநாயக்க இல்லாத காலங்கள் |
| திரு. வி. சோமசுந்தரம் .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 பெப்ருவரி 16, 18, 19, 20, 22 லிருந்து 27 வரை | திரு. ஐ. இருபாகரன் இல்லாத காலங்கள் |
| திரு. எஸ். ஏ. யற்றவர .. | மாத்தளை வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில தலைவர் | 1970 மார்ச் 1 லிருந்து 5 ம், 9 லிருந்து 14ம் 16 லிருந்து 21 ம், 24 லிருந்து 26 ம், 28 ம் 31 ம் | அல்லது மறு அறிவித்தல் வரை |
| திரு. டபிள்யு.எச். பி. பீரிஸ் .. | கங்கபொடப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்ற மேலதிக தலைவர் | 1970 மார்ச் 1 லிருந்து | கந்துகல்ல ஊர்நீதிமன்ற 2133 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| அல். கஜ். எஸ். எஸ். பி. எஸ். எச். கே. மௌலானா | காதி, தங்காலை நீதிபரிபாலனப் பிரிவு .. | 1970 மார்ச் 5 லிருந்து 3 வருட காலத்திற்கு | அல்லது மறு அறிவித்தல் வரை |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 மார்ச் 3.

எஸ். அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

3–191/1

---

1970 இன் இல. 89

## நீதிச்சேவை ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்தப்பட்ட நியமனங்கள்

திரு. ஜி. சி. டபிள்யு. டீ சில்வா, 1967 பெப்ருவரி 1 லிருந்து இலங்கை நீதிச்சேவையில் ஒரு உத்தியோகத்தராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

திரு. எவ். ஜி. பி. பெர்ணன்டோ, 1967 பெப்ருவரி 1 லிருந்து இலங்கை நீதிச் சேவையில் ஒரு உத்தியோகத்தராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

திரு. ஜி. ஜி. டி. டீ சில்வா, 1967 பெப்ருவரி 1 லிருந்து இலங்கை நீதிச்சேவையில் ஒரு உத்தியோகத்தராக உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 மார்ச் 3.

எஸ். அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

3–191/2

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 90

பி 4/எஸ்வி 2/345, பி 4/எஸ்வி 16/93, பி 4/எஸ்வி 32/34, பி 4/எஸ்வி 10/46, பி 4/எஸ்வி 15/58, பி 4/எஸ்வி 32/40, பி 4/எஸ்வி 16/94, பி 4/எஸ்வி 16/71, பி 4/எஸ்வி 17/4, பி 4/எஸ்வி 18/10.

### நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்

**82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர் அலெக்சாந்தர் பெயர்லி விஜேமான்ன ஆகிய யான்—

1. பெரும்புலி அச்சிகே டொன் ஹெமானிஸ் அவர்களைக் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானொருவராக வும்,
2. தோமஸ் சேரசிங்க அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
3. உக்குபண்டா ராஜகருண் அவர்களை அனுராதபுர நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
4. மதுரண கெதர விஜேதுங்க அவர்களை நுவரேலியா நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
5. காரியவசம் தந்திரிகே ஆரியபால அவர்களைக் காலி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
6. கிரிபண்டாகே அப்புகாமி ராஜகருண அவர்களை அனுராதபுர நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராக வும்,
7. மெனிக் புரகே எதோரிஸ் அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
8. ஆதர் குமாரநாயக அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
9. துமிங்கு கேவகே ஜினதாச விஜேசூரிய அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராக வும்,
10. குலரத்ன சமரசேகர அவர்களைத் தங்காலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,

**இத்தால் நியமிக்கின்றேன்.**

ஏ. எப். விஜேமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 4 ந் உ.

3–110

---

1970 இன் இல. 91

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

துரைசிங்கம் ஜெயராஜசிங்கம் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3–51

---

1970 இன் இல. 92

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கந்தையா நீலகண்டன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

3–198

1970 இன் இல. 93

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

லக்ஸ்மன் சுனில் பிரேம் ஜயதிலக்க அவர்கள் பதுளை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

3–196

---

1970 இன் இல. 94

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

செல்வி இந்திரா மினட் வீரரத்ன, ரத்தினபுரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

3–197

---

## அரசாங்க அறிவித்தல்கள்

எல. டி.—பி. 45/51 இல. டி. 239/ரிஆர்ஜ்

### தரைப்படைச் சட்டம்

(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 155 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

டட்லி சேனநாயக,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, பெப்புருவரி 27

**ஒழுங்குவிதி**

1955, செத்தம்பர் மாதம் 16 ஆம் திகதிய 10,839 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டபடியான 1951 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 10,332 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1951 ஆம் ஆண்டின் தரைப்படை (கடல் கடந்த ) பயிற்சி ஒழுங்குவிதிகள் அவற்றின் 5 ஆம் ஒழுங்குவிதியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதன் (2) ஆம் பந்தியில் " மாட்சிமை தங்கிய மகாராசாவின் கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய " என்ற சொற்களுக்காக "ஏதேனுமொரு கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய" என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும் ;

(2) அதன் (4) ஆம் பந்தியில் "அவ்வக்காலத்தில் நடைமுறையிலிருந்து கொண்டிருக்கும் ஐக்கிய இராச்சியத்தினது கடற்படை, தரைப்படை, ஆகாயப்படைச்சட்டத்துடன் " என்ற சொற்களுக்காக "அத்தகைய பயிற்சித் தாபனம், கப்பல், வானூர்தி அல்லது இடைப்போக்குப் பாசறை எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாட்டின் சட்டத்துடன் " என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும்.

3–173/1

---

எல். டி.—பீ. 60/53 இல. : டி 239/ரிஆர்ஜ்

### கடற்படைச் சட்டம்

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி.

டட்லி சேனநாயக,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27.

### ஒழுங்குவிதி

1955 ஆம் ஆண்டு செத்தம்பர் மாதம் 16 ஆம் திகதிய 10,839 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1955 ஆம் ஆண்டின் கடற்படை (கடல் கடந்த) பயிற்சி ஒழுங்குவிதிகள் 4 ஆம் ஒழுங்குவிதியில் இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதன் (2) ஆம் பந்தியில் " மாட்சிமை தங்கிய மகாராணியின் கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய " என்ற சொற்களுக்காக " ஏதேனுமொரு கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய " என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும் ; அத்துடன்

(2) அதன் (4) ஆம் பந்தியில், " அவ்வக்காலத்தில் நடைமுறையி லுள்ள ஐக்கிய இராச்சியத்தின் கடற்படை, தரைப்படை, ஆகாயப் படைச் சட்டத்துடன்", என்ற சொற்களுக்காக " அத்தகைய பயிற்சித் தாபனம், கபல், வானூர்தி அல்லது இடைப்போக்குப் பாசறை எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாட்டின் சட்டத்துடன்" என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும்.

3—173/2

---

எல். டி.–பீ. 130/50 இல. : டி. 239/ரிஆர்ஜீ.

### ஆகாயப்படைச் சட்டம்

(359 ஆம் அத்தியாயமான) ஆகாயப்படைச் சட்டத்தின் 155 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி.

டட்லி சேனநாயக
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ௵ பெப்புருவரி ௴ 27.

### ஒழுங்குவிதி

1955, செத்தம்பர் மாதம் 16 ஆம் திகதிய 10,839 ஆம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியினுற் திருத்தப்பட்டபடியான 1951, நவெம்பர் 30 ஆம் திகதிய 10,325 ஆம் இலக்க கசெற்றிற் பிர சுரிக்கப்பட்ட 1951 ஆம் ஆண்டின் இலங்கை அரச ஆகாயப்படை (கடல் கடந்த) பயிற்சி ஒழுங்குவிதிகள் 6 ஆம் ஒழுங்குவிதியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) அதன் (2) ஆம் பந்தியில் " மாட்சிமை தங்கிய மகாராசாவின் கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய", என்ற சொற்களுக்காக " ஏதேனுமொரு கடற்படை அல்லது ஆகாயப்படைக்குரிய " என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும் ; அத்துடன்

(2) அதன் (4) ஆம் பந்தியில், " அவ்வக்காலத்தில் நடைமுறையி லுள்ள ஐக்கிய இராச்சியத்தின் கடற்படை, தரைப்படை, ஆகாயப் படைச் சட்டத்துடன்", என்ற சொற்களுக்குப் பதிலாக " அத்தகைய பயிற்சித் தாபனம், கப்பல், வானூர்தி அல்லது இடைப்போக்குப் பாசறை எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாட்டின் சட்டத்துடன்" என்ற சொற்களைப் பதிலீடு செய்தல் மூலமும்.

3–173/3

---

ச.வ.பீ. 7/63.

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 16 அ என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, நீதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்க ஆகிய நான், இதற்குள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள நிறுவனமொவ்வொன் றையும் அப்பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அறநிலையம் ஒன்றென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகிறேன்.

யூ. பீ. வன்னிநாயக்க,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970.2.26.

#### அட்டவணை

1. மன இயல் நிலைக்குக் குறைவான பிள்ளைகளுக்கான பாடசாலை யின் நலன்புரிச் சங்கம்.
2. இலங்கையின் தொழுநோய்ச் சங்கம்.

3–58

---

### 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் ஊழியர் சேமநிதிச் சட்டம் மேல் முறையீட்டு மன்றம்

1958 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ம் திகதி வெளிவந்த 11,573 ம் இல. வர்த்தமானியிற் பிரசுரமான 1958 ம் ஆண்டு ஊழியர் சேமநிதி ஒழுங்கு விதிகளின் 47 ம் ஒழுங்கு விதியால் தொழில், தொழில் வசதி மந்திரிக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, மொஹமது அனிபா மொகமது ஆகிய நான்—

(அ) 1958 ம் ஆண்டின் 15 ம் இல. ஊழியர் சேமநிதிச் சட்டத்தில் 29 ம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ள மேல் முறையீட்டுமன்றத்தில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி தொடக்கம் அங்கம் வகிப்பதற்கு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக் கப்பட்டவர்களையும் ;

(ஆ) தலைவராகக் கடமையாற்றுவதற்கு, மேல் முறையீட்டுமன்றத்தின் அங்கத்தவராகிய கர்னல் நொயெல் லூஸ் ஜான்ஸ் என்ப வரையும் இத்தால் நியமிக்கின்றேன்.

எம். எச். மொஹமட்,
தொழில், தொழில்வசதி மந்திரி.

1970 ம் ௵ பெப்புருவரி ௴ 26 ந உ.
கொழும்பு.

#### அட்டவணை

(1) கர்னல் நொயெல் லூஸ் ஜான்ஸ்
(2) அப்துல்லா மொகமது அமீன்
(3) டானியெல் இருபா சுந்தரம் சுப்பிரமணியம்
(4) மாத்தர ஆராச்சிகே தொன் அமரதாச கருணாதிலக
(5) கிலோட் மெண்டிஸ்

3–61

---

எல். டீ.—பீ. 138/47 பீ. சீ. சீ. ஏ. 744/50.

### சுங்க அறிவித்தல் (இறுப்பு) இல. 69/6

#### சுங்கக் கட்டளைச்சட்டம்

(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம் 1970 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 8 ஆந் தேதியில், பிரதிநிதிகள் சபையின் பகிரங்க அமர்வின்போது அதனால் நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

எச். ஆர். டி சொய்சா,
நிதியமைச்சின் நிரந்தரச் செயலாளருக்காக.

கொழும்பு,
1970 ம் ௵ பெப்புவரி ௴ 27 ந உ.

#### தீர்மானம்

இதனகத்துள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் அவ்வட்டவணையின் நிரல் II இல் தரப்பட் டுள்ள ஒத்த பதிவில் காட்டப்பட்டுள்ள வீதப்படி இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படுந் தேதி முதல் ஏற்றுமதித் தீர்வை செலுத்தப்படல் வேண்டுமென (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இச்சபை தீர்மானிக்கிறது.

#### அட்டவணை

| நிரல் I<br>பொருள் | நிரல் II<br>வீதம் |
|---|---|
| உடன்பானத் தேயிலை உறைகளில், சிறு பொதிகளில் அளவு படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட கீழ் வரும் விவரணைக்குள்ளான தேயிலை ஆகியவை தவிர்ந்த, எந்த விவரணைக்குமுள்ளான தேயிலை | ஒவ்வொரு 100 இருத்தல்களுக்கும் ரூபா 39 00 |
| உறைகளிலும், சிறு பொதிகளிலும் அளவுபடுத்தப் பட்டு அடைக்கப்பட்ட தேயிலை— | |
| உள்ளுறை, தாள் அல்லது அலுமீனிய மென் தகட்டைக் கொண்டு அடைக்கப்பட்டுள்ள தேயிலை— | |
| (அ) பொலிதீன் பை அல்லது மேலுறையுடன் கூடியதும் அவற்றின் மேல் சுட்டுத்துண்டு அச்சடிக்கப்பட்டதும் .. | இருத்தல் ஒவ்வொன்றும் 0 24 சதம் |
| (ஆ) சிறு பெட்டியில அடைக்கப்பட்டதும் | |
| (இ) அட்டைப் பலகையினாலான பெட்டியில் அடைக்கப்பட்டதும் .. | |
| (ஈ) மரப்பெட்டியினுல் அடைக்கப்பட்டதும் | |
| (உ) கயிற்றுக் கூடையினுல் அடைக்கப்பட்டதும் | |
| (ஊ) மூலைப் பொறு மட்டும் கொண்ட சிப்பத்தினுள் அடைக்கப்பட்டதும் | |
| (எ) வெளியுறை முழுப் பொதியையும் மூடாமல் | |

| நிரல் I<br>பொருள் | நிரல் II<br>வீதம் |
|---|---|
| மூலைப் பொது கொண்ட சிறு பொதியில் அல்லது சிறு பெட்டியில் அடைக்கப்பட்ட தேயிலை | இருத்தல் ஒவ்வொன்றும் 0 24 சதம் |
| தாள் ஒட்டப்பட்ட அலுமினிய மென்தகட்டினுள் அடைக்கப்பட்ட தேயிலை | இருத்தல் ஒவ்வொன்றும் 0 24 சதம் |
| தேயிலைச் சிப்பம் அடைக்கப்பட்டுள்ள உறை, வெளி உறை, சிறுபெட்டி அல்லது அட்டைப் பலகையினுலான பெட்டி ஆகியவைகளில் மிகத் தெளிவாக " இலங்கையில் அடைக்கப்பட்ட தூய இலங்கைத் தேயிலை " என்ற சொற்கள் அல்லது அதே கருத்தைக் கொண்டுள்ளதென்று முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளரினுல் கருதப்படும் வேறு சொற்கள் பொறிக்கப்பட வேண்டும். அடைக்கப் பட்டுள்ள சிறு பொதியில் தேயிலையின் தேறிய நிறை 2.20 இருத்தல் அல்லது 1 கிலோகிரும் ஆகியவற்றிற்கு மேற்படாததாகவிருத்தல் வேண்டும். நீரில் அமிழ்த்தி நுகர்வதற்காகத் தயாரிக்கப்பட்ட வடிதாள் அல்லது வடிதுளியால் ஆகிய பையினுள்ள தேயிலை | இருத்தல் ஒவ்வொன்றும் 0 24 சதம் |

தேயிலைப்பை ஓர் மேலுறையால் மூடப்பட்டிருப்பின் " இலங்கையில் அடைக்கப்பட்ட தூய இலங்கைத் தேயிலை " அல்லது முதன்மைச் சுங்க சேகரிப்பாளரின் கருத்துப்படி அதே பொருளை வெளிப்படுத்தும், வேறு சொற்கள் அம்மேலுறையில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.

தேயிலைப் பைகள் ஒரு அட்டைப் பலகையினுலான பெட்டியினுள் அடைக்கப்பட்டிருப்பின், அப்பெட்டியிலுள்ள பைகளின் எண்ணிக்கையும், ஒவ்வொரு பையினுள்ள தேயிலையின் தேறிய நிறையும், அட்டைப் பலகையினுலான பெட்டியின் வெளிப்புறத்தில் குறிக்கப்பட வேண்டும்.

ஒரு தேயிலைப் பையினுள்ள தேயிலையின் தேறிய நிறை 12 அவுன்சுக்கும் 240 கிறும்களுக்கும் மேற்படக்கூடாது.

3-59

---

## பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டம்

### 5 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(110 ம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜயானந்த தஹநாயக்க ஆகிய நான் இவ்வறிவித்தல் மூலம், 1935 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ந் திகதிய 8,146 ம் இலக்க கசெற்றில அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டு அதன்பின் திருத்தப்பட்ட அறிவித்தலை அதன் அட்டவணையில் " தென் மாகாணம், காலி மாவட்டம் " என்னும் தலைப்பின் கீழ்—

(1) வளவே, பிரிவு சம்பந்தமான 44 ம் விடயத்திற்குப் பதிலாக, இதற்குள் அ என்னும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள, விடயத்தைச சேர்த்தல் மூலமும் ;

(2) 44 ம் விடயத்தை உடன் அடுத்து ஆ என்னும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 45 ம் புதிய விடயத்தை சேர்த்தல் மூலமும்,

1970 ம் ஆண்டு எப்பிறல் 1 ந் தேதியிலிருந்து, இவ்வறிவித்தல் மூலந் திருத்துகிறேன்.

வி. தகநாயக்க,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 18 ந் உ.

### அட்டவணை அ

44. பின்வரும் கிராமங்களடங்கிய வளவே பிரிவு : —

| | |
|---|---|
| இரும்புருவ | பொல்பாகொட |
| கருகொட | வல்பொல |
| மாகெதெற | வெலண்தாவ |
| நபடாவ | யட்டமலகல |

### அட்டவணை ஆ

45. பின்வரும் கிராமங்களடங்கிய கொட்டாவைப் பிரிவு : —

| | |
|---|---|
| பொணகொட | தெலம்புற |
| கொட்டாவ | உடமலகல |
| நாக்கியாதெனிய | உடுபத்தாவ |
| தல்கம் பொல | |

3-111

இல. சி/39/7/66

## 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளை 61 ம் பிரிவின் கீழான கட்டளை

1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 61 ம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் இயற்றப்பட்ட கட்டளை.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

கொழும்பு, மார்ச் 1, 1970.

### கட்டளை இல. 193

1. இதனகத்துள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப் பட்டிருககும் அதிகாரங்கள், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, சொல்லப் பட்ட அட்டவணையின் II ம் நிரலின் ஒத்திசைவான பதிவில் குறிப்பிடப் பட்டுள்ள கமத்தொழிற்றிணைக்கள உத்தியோகத்தருக்கு அலலது உத்தியோகத்தர்களுக்கு இத்தால் கையளிக்கப்படுகிறது :—

(அ) அவ்வதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினுல் காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படலாய அத்தகைய அறிவுறுத்துரைகளுக்கமையப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அக்கட்டளையின் கீழ் கமத்தொழிற்பணிப்பாளர் அல்லாத ஒரு உத்தியோகத்தர் அத்தகைய உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள எவ்வதிகாரத்தின் கீழேனும் செய்யும் தீர்மானத்துடன் திருப்தியடையாத ஆள் எவரேனும் அதிலிருந்து கமத்தொழிற்பிணப்பாளர்க்கு முறையீடு செய்யலாம்.

(இ) இக்கட்டளையின் கீழ் எவ்வுத்தியோகத்தருக்கேனும் கையளிக்கப் படடுள்ள தண்டனை அதிகாரம் எதனையும் எவ்விடயத்திலேனும் அரசாங்க சேவை ஆணைக்குழு அதுவாகவே பிரயோகிக்கத் தீர்மானிக்குமிடத்து அத்தகைய உத்தியோகத்தர் அவ்வதிகாரத்தை அவ்விடயத்தில் பிரயோகித்தலாகாது.

2. இக்கட்டளையிலுள்ள எதுவும் 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 61 ஆம் பிரிவினுல் அளிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்யும் உரிமையை தாழ்த்துவதாக அல்லது வேறேதேனும் வழியால் பாதிப்பதாகக் கருதப்படுதல் அல்லது பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

3. இக்கட்டளை, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 61 ஆம் பிரிவின் கீழ் இயற்றப்பட்டு 1955 ஆம் ஆண்டு ஒற்ரோபர் 7 ந் தேதிய 10,847 ம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட 83 ம் இலக்கக் கட்டளையிலே உள்ள எதற்கும் அமையாது பயனுள்ளதாகும்.

4. பின்னர் திருத்தப்பட்டவாருன, 1.8.1958 ஆந் திகதிய 11,465 ஆம் இலக்க கசெற்றில வெளியிடப்பட்ட 112 ஆம் இலக்கக்கட்டளை, அதனகத்துள்ள அட்டவணையில், கமத்தொழிற்றிணைக்கள சம்பந்தப் பட்ட விடயங்கள் நீக்கப்படுதல் மூலம் இத்தால் மீண்டும் திருத்தி அமைக்கப்படுகின்றது.

### அட்டவணை

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் |
|---|---|
| 1. ஆண்டொன்றுக்கு 4,080 ரூபாவுக்குக் கீழ்ப்பட்ட தொடக்க சம்பளம் உள்ள (இணைந்த சேவைகளின் பதவிகள் அல்லாத) பதவிகள் சம்பந்தமாக நியமனங்கள் (நிலையான அல்லது தற்காலிக) ஆக்கும் தத்துவம் | கமத்தொழிற் பணிப்பாளர் பிரதி கமத்தொழிற்பணிப் பாளர், (நிருவாகம்) |
| 2. ஆண்டொன்றுக்கு 2,700 ரூபாவுக்கு மேற்படாத உபகாரச் சம்பள வரும்படிகள் அல்லது ஆண்டொன்றுக்கு உபகாரச் சம்பளத்துக்கு உரித்தில்லாத 3,180 ரூபாவுக்கு மேற்படாத ஆண்டுச் சம்பளத்தைப் பெறும் (இணைந்த சேவைகளின் உத்தியோகத்தர் அல்லாத) உத்தியோகத்தர் எவரையேனும் குற்றத்தீர்ப்புக் காரணமில்லா எக்காரணத்தின் பொருட்டும் கெட்ட நடைக்காக விலக்கும் அல்லது வேறு விதமாகத் தண்டிக்கும் அதிகாரம் | கமத்தொழிற் பணிப்பாளர் பிரதி கமத்தொழிற்பணிப் பாளர், (நிருவாகம்) |

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் |
| --- | --- |
| 3. ஆண்டொன்றுக்கு 2,700 ரூபாவுக்கு மேற்படாத உபகாரச் சம்பள வரும்படிகள் அல்லது ஆண்டொன்றுக்கு உபகாரச் சம்பளத்துக்கு உரித்தில்லாத 3,180 ரூபாவுக்கு மேற்படாத ஆண்டுச் சம்பள வரும்படிகளைப் பெறும் உத்தியோகத்தர் எவரையேனும் குற்றத் தீர்ப்புக் காரணமில்லா எக்காரணத்தின் பொருட்டும் கண்டிக்க அல்லது கடுமையாகக் கண்டிக்க, ஒருவார சம்பளத்துக்குமேற்படாத குற்றப்பணத்தை விதித்துத் தண்டிக்க, ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்கு சம்பள ஏற்றத்தை இடைநிறுத்த, நிறுத்த, தாழ்த்த அல்லது பின்போட உரிய அதிகாரம் | கமத்தொழிற் பணிப்பாளர் பிரதி கமத்தொழிற்பணிப்பாளர், (நிருவாகம்) |
| 4. ஆண்டொன்றுக்கு 2,700 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் ஆண்டொன்றுக்கு ப. 690 அல்லது 9,360 ரூபாவுக்குமேற்படாத உபகாரச் சம்பள வரும்படி அல்லது உபகாரச் சம்பள வரும்படிக்கு உரிமையில்லாத ஆண்டுக்கு 3,180 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் ஆண்டுக்கு ப. 690 அல்லது 9,360 ரூபாவுக்கு மேற்படாத ஆண்டுச் சம்பளத்தைப்பெறும் (இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லாத) உத்தியோகத்தர் எவரையேனும் கண்டிக்க அல்லது கடுமையாகக் கண்டிக்க, ஒருவார சம்பளத்துக்கு மேற்படாத குற்றப்பணத்தை விதித்துத் தண்டிக்க ஓராண்டுக்கு மேற்படாத காலத்துக்கு சம்பள மாற்றத்தை இடைநிறுத்த, நிறுத்த, தாழ்த்த அல்லது பின்போட உரிய அதிகாரம் | கமத்தொழிற் பணிப்பாளர் பிரதி கமத்தொழிற்பணிப்பாளர், (நிருவாகம்) |
| 5. ஆண்டொன்றுக்கு 2,700 ரூபாவுக்கு மேற்படாத உபகாரச் சம்பள வரும்படி அல்லது உபகாரச் சம்பளத்துக்கு உரிமையில்லாத ஆண்டொன்றுக்கு 3,180 ரூபாவுக்கு மேற்படாத சம்பள வரும்படி உள்ள (இணைந்த சேவையிலில்லாத) உத்தியோகத்தர் எவரையும் கண்டிக்க, கடுமையாகக் கண்டிக்க ஒருவாரச் சம்பளத்துக்கு மேற்படாத குற்றப்பணத்தை விதித்துத் தண்டிக்க உரிய அதிகாரம். | பிரதி கமத்தொழிற்பணிப்பாளர்<br>பிரதான கணக்காளர்<br>உதவி கமத்தொழிற்பணிப்பாளர்கள்<br>அத்தியட்ச இஞ்சினியர்<br>பிரதான இஞ்சினியர்<br>பரிபால உத்தியோகத்தர்கள்<br>கமத்தொழில் உத்தியோகத்தர்கள்<br>ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்<br>கணக்காளர்கள்<br>அத்தியட்சர், அரச பல்லினத்தாவரத் தோட்டங்கள்<br>தலைமை அதிபதி, கால்நடை வளர்ப்புப் பண்ணைகள்<br>இரசாயனர்<br>தாவர நோய்க்கூற்று வல்லார்<br>சிற்றுயிர் நூல் வல்லர்<br>மண்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்<br>புகையிலை உத்தியோகத்தர்<br>கமத்தொழில் உத்தியோகத்தர் (புகையிலை)<br>மிருகவைத்திய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்<br>கால்நடை உத்தியோகத்தர்<br>கமத்தொழில் இஞ்சினியர்<br>உதவி அத்தியட்சர் அரச பல்லினத்தாவரத் தோட்டங்கள்<br>உதவி தாவர நூலோர்<br>உதவி இரசாயனர்<br>பாதுகாவலர் பல்லினத்தாவரத் தோட்டங்கள்<br>கந்தோர் உதவியாளர்<br>பிரதான எழுதுவினைஞர்<br>இயந்திரத்தொழில் அத்தியட்சர்<br>மிருகவைத்தியர்கள்<br>உதவி தலைமை அதிபதிகள், கால்நடை வளர்ப்புப் பண்ணைகள்<br>இந்திரிய ஊசியேற்றும் உத்தியோகத்தர்<br>அத்தியட்சர் வைக்சீன் ஆக்கம்<br>விரிவுரையாளர் கமத்தொழில் பாடசாலை<br>(ஆண்டொன்றுக்கு 5,160—360—8,400 ரூபாவில் உள்ளோர்)<br>விசேட தரத்திலும் நிறைவேற்றும் தரம் 1 லும் உள்ள உத்தியோகத்தர்கள்<br>பொது எழுதுவினைஞர் சேவையில் எழுதுவினைஞர் வகுப்பினர்<br>விசேட தரத்திலும் 1 ம் தரத்திலும் உள்ள கமத்தொழிற் போதனாசிரியர்கள். |

இந்த அட்டவணையிலே " இணைந்த சேவை " என்பது கணக்காளர் சேவை, பொது எழுதுவினைஞர் சேவை, தட்டச்சாளர் சேவை, மாற்றத்துக்குரிய சுருக்குத் தட்டெழுத்தாளர் சேவை, சிறுப்பர் சேவை, மொழிபெயர்ப்பாளர் சேவை ஆகியவற்றைக் குறிக்கும்.

3–117

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பலபிட்டிய நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதிபெற்றுள்ள கொறுவகே தர்ம சிறி பர்ணந்து அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவாகளால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3–54

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதிபெற்றுள்ள தியகு பதுரகே டெனி டீ சில்வா அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3–53

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

யாழ்ப்பாண நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதிபெற்றுள்ள அந்தோனிப்பிள்ளை மிரியாம்பிள்ளை அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விகவார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3–52

எல்டீ/பீ-11/60

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

(175 ம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

டபிள்யு தகநாயக்க,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 2 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் 1970 ம் ஆண்டின் தம்புள்ள விகாரையில் வெசாக், பொசன் யாத்திரை ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப் படலாம்.

2. இவ்வொழுங்கு விதிகளில்—

" வாடிப் பிரதேசம் " என்பது இங்குள்ள அட்டவணையிற் குறிக்கப் பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட இடப்பரப்பு எனப் பொருள் படும்.

" அரசாங்க அதிபர் " என்பது மாத்தளை மாவட்டத்திலுள்ள அரசாங்க அதிபர் எனப் பொருள்படும்.

" சுகாதார வைத்திய உத்தியோகத்தர் " என்பது மாத்தளை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

" உதவிப் பொலீஸ் அதிபர் " என்பது மாத்தளை மாவட்ட உதவிப் பொலீஸ் அதிபர் எனப் பொருள்படும்.

3. இவ்வொழுங்கு விதிகள் தம்புள்ள விகாரைக்குரிய எல்லா யாத்திரைகளுக்கும் பொருத்தமானவையாகும்.

4. வாடிப்பிரதேசம் அரசாங்க அதிபரின் பொதுக் கட்டுப்பாட்டினுள் இருக்கும். உதவிப் பொலீஸ் அதிபரும், சுகாதார வைத்திய உத்தியோகத்தரும் அவருக்கு உதவியாக இருப்பர், அரசாங்க அதிபர் இல்லாத வேளைகளில் தம்புள்ள காரியாதிகாரியின் பொதுக் கட்டுப்பாட்டினுள் இருக்கும். இவ்விதிகளின் கீழ் அரசாங்க அதிபர், உதவிப் பொலீஸ் அதிபர், சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஆகியவர்களின் அதிகாரங் கள் முறையே தம்புள்ள காரியாதிகாரி, வாடிப்பிரதேசத்தில் இருக்கும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி, பொதுசன சுகாதார பரிசோதகர் ஆகியோரால் பிரயோகிக்கப்படலாம்.

5. அரசாங்க அதிபருக்கு கீழ்க்காணப்படும் அதிகாரங்கள் கையளிக்கப் பட்டுள்ளன :—

(அ) கழுவுவதற்கும், குடிப்பதற்கும் குடிதண்ணீர் எடுத்துக்கொள்ள வும், வீட்டுப் பாவிப்பிற்கும் பிரத்தியேக இடங்களை நியமித்தல்.

(ஆ) ஒவ்வொரு தரப்பட்ட யாத்திரீகர்களுக்கும் புறம்பான வதிவிடங்கள் நியமித்தல்.

(இ) யாத்திரீகர்களுக்கு உணவுகளெல்லாம் விநியோகம் செய்தலை ஒழுங்கு படுத்தல்.

(ஈ) நோய் பீடிக்கப்பட்ட யாத்திரீகர்கள் தங்குவதற்குப் பிரத்தியேக மான இடங்கள் அமைத்தலும், மற்றவர்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு தடுத்தலும், அவர்கள் பிரயாணம் செய்ய முடியாதவர்களாய் உள்ளவிடத்து அவர்களைத் தடுத்து வைத்தலும்.

(உ) வண்டிகள், கால்நடைகள், பஸ், கார் ஆகிய மோட்டார் வாகனங் கள் தரிப்பதற்குப் புறம்பான இடங்கள் நியமித்தலும், ஏனைய இடங்களைப் பாவித்தற்குத் தடைசெய்தலும்.

(ஊ) போசன சாலைகள், சாவடிகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும் மிருகங்கள் பறவைகள் ஆகியவற்றை அறுப்பதற்கும் புறம்பான இடங்களை நியமித்தலும், ஏனைய இடங்களைப் பாவித்தற்குத் தடை செய்தலும்.

6. அரசாங்க அதிபரால் அதற்கெனக் குறித்த இடத்திலன்றி வேறு எவ்விடத்திலாயினும் மலசலம் கழித்தலாகாது.

7. வாடிப்பிரதேசத்தினுள் அதற்கென அரசாங்க அதிபரின் அங்கீ காரத்துடன் ஒதுக்கப்பட்ட இடத்திலோ அல்லது கொள்கலத்திலோ அன்றி மற்றெவ்விடத்திலாயினும் எவரேனும் எப்பிற கழிவுப் பொருட் களையும் வீசலாகாது.

8. அரசாங்க அதிபரின் அனுமதிப் பத்திரமின்றி பேக்கரி, குளிர் பாணக் கடைகள், தேநீர்க் கடைகள், உணவுச் சாலைகள் அமைப்பதும் கொண்டு நடத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

9. (1) வாடிப்பிரதேசத்தினுள் குறிக்கப்பட்ட இடத்திலன்றி எவரா யினும் எவ்வித பண்டங்களையும் விற்பனைக்கு வைத்தலாகாது.

(2) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் உடல் நலத்திற்கொவ்வாத தென நிராகரிக்கப்பட்ட எவ்வித உணவுப் பண்டங்களையும் எவரும் விற்பனைக்கு வைத்தலாகாது.

(3) உடல் நலத்திற்கொவ்வாததென சுகாதார உத்தியோகத்தர் எண்ணும் எவ்வித உணவுப் பண்டங்களையும் பறிமுதல் செய்து அழித்து விடுதல் சட்ட முறையானதாகும்.

10. (1) போசன சாலைகள், தேநீர்க் கடைகள் துப்புரவாகவும் சுகாதார முறையில் அமைந்ததாகவும் வைத்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) விற்பனைக்கு வைக்கப்படும் கேக், மிட்டாய்கள் ஆகிய பண்டங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்ட கண்ணாடி அலுமாரிகளில் வைத்திருக்கப் படல் வேண்டும்.

(3) பாவிக்கப்பட்ட தேயிலை, கோப்பி, பால், அழுகிய பதார்த்தங்கள் வீசப்படும் கழிவுப் பொருட்களை நிலத்தில் போடுதல் கூடாது. அப்படிப்பட்ட கழிவுப் பொருட்களை சுகாதாரப் பரிசோதகர் எந்நேரமும் அப்புறப் படுத்தக் கூடியதாக தகுந்த பாத்திரத்தில் சேகரித்து வைத்திருக்கப்படல் வேண்டும்.

(4) வியாபார ஸ்தாபனங்களாகப் பாவிக்கப்படும் கட்டிடங்கள் அமைப்பு கள் அல்லது வேறிடங்களில் உலோகத்தால் அல்லது மரத்தால் ஆக்கப் பட்டதும் 4½ கன அடிக்குக் குறைவில்லாததும் ஆன குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கழிவுப் பொருட்கள் போடும் போதும் எடுக்கும் போதும் ஆகிய நேரங்களைத் தவிர்த்து எந்நேரமும் உலோகத்தால் அல்லது மரத்தால் ஆன மூடியால் மூடி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்ட எவரும் வாடிப்பிரதேசத்தினுள் பிரவேசித்தல் தடுக்கப்பட்டுள்ளது.

12. தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவர்களை வாடிப்பிரதேசத்தினுள் கொண்டு வருதல் அல்லது அந்நோயாளர் உட்புகுவதற்கு எவரேனும் உடந்தையாயிருத்தல் அல்லது உதவி செய்தலாகாது.

13. உற்சவ காலத்தில் வாடிப்பிரதேசத்தில் கொள்ளை நோய் பரவக் காணப்பட்டால் யாத்திரீகர்களை அவ்விடத்திலிருந்தும் வெளியேறும்படி பணித்தலும், அவர்கள் போக வேண்டிய வழியையும் வாகனங்களையும் குறிப்பிடுதலும் அரசாங்க அதிபருக்குச் சட்ட முறையானதாகும்.

14. வாடிப்பிரதேசத்தில் தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவரும் தம்மோடு வதிந்து வரும் நபருக்கு தொற்று நோய் அல்லது ஒட்டு நோய் உண்டென்பதை அறிந்தவரும் அச்சம்பவத்தை சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

15. அரசாங்க அதிபரின் முன் அனுமதியின்றி,வாடிப்பிரதேசத்தினுள் வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள அல்லது வீதியைத் தடை செய்யக் கூடிய வகையில் கடைகள் கட்டுவதையோ அல்லது கட்டிடங்களை பெருப்பிப் பதையோ தடை செய்யப்பட்டுள்ளது.

16. மனித தேவைக்காக எந்தவொரு மிருகத்தையும் வாடிப் பிரதேசத்தினுள் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலன்றி வேறெவ் விடத்திலேனும் அறுத்தலாகாது. அரசாங்க அதிபரால் அதற்கென ஒதுக்கப்பட்ட எந்த இடத்திலும் மிருகங்களை அறுப்பவர்கள் தாங்களே அந்த இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டியவராவர்.

17. உதவிப் பொலீஸ் அதிபரின் உத்தரவின்றி வாடிப்பிரதேசத்தி னுள்ளோ அல்லது அப்பிரதேசத்திலிருந்தும் ஒரு மைல் தூரத்தி னுள்ளோ எவராவது வாணங்களைக் கொழுத்துவதோ, துவக்கு வெடி வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

18. எவராவது கீழ்க்காணப்படுவனவற்றை வாடிப்பிரதேசத்திலிருந்து ஒரு மைலுக்குள் நடத்தலாகாது :—

(1) கேளிக்கைகளும், நடனங்களும்.
(2) நாடகங்கள்.
(3) சூது விளையாடுதல், லொத்தர் குலுக்குதல்.
(4) மதுபானம் விற்றல்.
(5) ஒலி பெருக்கிகள் மூலம் விளம்பரம் செய்தல்.
(6) சமயத்திற்கும், புத்த மகத்திற்கும் எதிரான புத்தகங்களை விநியோகித்தல்.

19. எவராயினும் வாடிப்பிரதேசத்தினுள் கீழ்க்காணப்படுவனவற் றைச் செய்தலாகாது :—

(1) வாடிப்பிரதேசத்தினுள் குறிக்கப்பட்ட இடத்திலன்றி எவராயினும் எவ்வித பண்டங்களையும் விற்பனைக்கு வைத்தலாகாது.

(2) வியாபாரப் பொருட்களை குறிப்பிட்ட இடத்திலன்றி வேறிடத்தில் விற்பனை செய்தல்.

(3) மரக் கிளைகள் வெட்டுதல்.

(4) தேவாலயப் பூசைக்கு குந்தகம் விளைக்கக் கூடிய ஒலி உண்டாக்கும் பொருட்களை விற்பனை செய்தல்.

(5) சமயப் பூசைக்குச் சம்பந்தமில்லாத பாட்டுக்களையும் பாட்டுக் கச்சேரிகளையும் ஒழுங்கு செய்தலும் அவற்றில் பங்குபற்றலும்.

(6) மது போதையில் இருத்தல், யாத்திரீகர்களுக்குப் பங்கம் விளை வித்தல்.

20. (1) வெசாக், போசன் ஆகிய யாத்திரை சமயங்களில் கீழ்க் காணப்படும் விதிகளின் ஏற்பாடுகள் நடைமுறையிலிருக்கும்.

(2) வெசாக், போசன் யாத்திரைகள் தினம் என்பது முறையே வைகாசி, ஆனி மாதங்களில் வரும் முழுப் பூரணை நாட்களாகும். பூரணை தினத்தின் முதல் நாளிலிருந்து பூரணை தினத்தின் பின்னர் இரண்டு நாட்கள் வரை வெசாக்கும். போசன் பூரணை தினத்தின் முதல் நாளிலிருந்து போசன் பூரணை நாளின் பின்னர் மூன்று நாட்களும் இவ்வொழுங்கு விதிகள் அமுலிலிருக்கும்.

(3) தம்புள்ள-மாத்தளை பிரதான வீதியின் இல. 45/1 கொண்ட போக்கும், நிசங்க மாவத்தையும், தம்புள்ள-மாத்தளை பிரதான வீதிச் சந்தி (வாடி வீட்டிற்கண்மையில்) வரையுள்ள பகுதியில் எவராயினும் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதோ நிற்பாட்டப்படுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

(4) தம்புள்ள விகாரை அதிகாரியினதோ ஏதேனுமொரு அரசாங்கத் திணைக்களத்தினதோ சொந்தமான மோட்டார் வாகனங்களைத் தவிர்ந்த வேறெந்த மோட்டார் வாகனங்களாவது பிரதான வாசலினூடாகவோ பின் வாசலினூடாகவோ வாடிப்பிரதேசத்தினுள் பிரவேசிக்க அனுமதித் தலாகாது. மேலும் எவ்வாகனங்களாவது விகாரை " மலுவ "த்திலோ தம்புள்ள விகாரையின் உச்சிக்குச் செல்லும் பாதையிலோ நிற்பாட்டுதல் நிறுத்திவைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

(5) வாகனங்கள் நிற்பாட்டப்படும் இடங்களைக் குறிக்கும் இடங்கள் அரசாங்க அதிபராலும் பொலீசாராலும் அறிவித்தற் பலகைகள் மூலம் ஒதுக்கப்படும்.

(6) இவ்வொழுங்கு விதிகளின் 3, 4, 5 ஆகிய பந்திகளில் காணப்படும் நிலையங்களில் கடமை உடையுடன் நின்று கடமையாற்றும் பொலீசாரால் மோட்டார் வாகனங்களை நிற்பாட்டவோ, பின் செல்லும் படியோ, வேகத்தைக் குறைக்கும்படியோ, திரும்பிச் செல்லும் படியோ, ஒரு பக்கத்தில் செல்லும்படியோ, ஒரு பக்கத்தில் வாகனங்களை ஒழுங்காகச் செலுத்தும்படியோ கூறப்படுவனவற்றையும் சைகையால் காட்டப்படு வனவற்றையும் வாகனச் சாரதிகள் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

(7) இவ்வொழுங்கு விதிகளில் மோட்டார் வாகனம் என்பது (203 ம் அத்தியாயமான) மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்திலுள்ள அதே பொருளை உடையதாகும்.

**அட்டவணை**

மாத்தளை மாவட்ட தம்புள்ள காரியாதிகாரி பிரிவின் பாதெனிய கிராம சேவகர் பிரிவிற்குள் அடங்கிய முழுப் பிரதேசமும் வாடிப்பிரதேசம் எனப்படும். அற்றின் எல்லைகளாவன :—

வடக்கு : உல்பொத்தஅல ரி. பி. 87076 கொண்ட பிளானில் காணப்படும் விகாரைக் காணிக்கூடாக தம்புள்ள விகாரையை நோக்கிச் செல்லும் வீதியின் இருபக்கத்திலும் 50′ யைத் தவிர்ந்த ஏனைய பிரதேசம்.

கிழக்கு : ரி. பி. 87076 கொண்ட பிளானில் காணப்படும் விகாரைக் காணிக்கூடாக தம்புள்ள விகாரையை நோக்கிச் செல்லும் வீதியின் இரு பக்கங்களிலும் 50′ யைத் தவிர்ந்த ஏனைய பகுதி. 173998, பிளானிலும் ரி. பி. 173999 கொண்ட பிளானிலும் குறிக்கப்பட்டுள்ள தனிப்பட்டவரின் காணி. மாத் தளை-திருகோணமலை பொது வேலைத் திணைக்கள வீதியின் கிழக்குப் பகுதியும் கிராம வாசிகளுக்கு குத்தகைக்கு கொடுக்கப் பட்ட விகாரைக்காணி.

தெற்கு : குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட விகாரைக் காணிக்கூடாக பிரதான வீதியைச் நோக்கிச் செல்லும் வீதியும், ஏ. எம். ஹீன் பண்டா, ஏ. எஸ். எம். ஜயசிங்க, யூ. கே. ஜீ. ரண்ஹாமி ஆகியவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்த காணி. கந்தென் வட்டுணஅல, ரி. பி. 87076 பிளானில குறிக்கப்பட்டுள்ள விகாரைக் காணிக்கூடாக தம்புள்ள விகாரையை நோக்கிச் செல்லும் பாதையின் இரு பக்கத்திலும் 50′ யைத் தவிர்ந்த ஏனைய பிரதேசம்.

மேற்கு : ரி. பி. 87076 பிளானில் குறிக்கப்பட்டுள்ள விகாரைக் காணிக்கூடாக தம்புள்ள விகாரையை நோக்கிச் செல்லும் வீதியின் இரு பக்கத்திலும் 50′ யைத் தவிர்ந்த ஏனைய பிரதேசம். எஸ். எம். ஜயசிங்க, டபிள்யூ. ஜீ. செனவிரத்ன, யூ. சே. ஜீ. ரண்ஹாமி, ஏ. எம். ஹீன் பண்டா என்பவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ள விகாரைக் காணி.

3-99/1

---

எல்டீ/பீ-11/60.

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

(175 ம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள் நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

டபிள்யு. தகநாயக்க,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 2 ந் வ.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 1970 ம் ஆண்டின் வஹகோட்டைப் புனித அந்தோனியார் தேவாலய யாத்திரை ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்கு விதிகள் :—

" வாடிப்பிரதேசம் " என்பது இங்குள்ள அட்டவணையிற் குறிக்கப் பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட இடப்பரப்பு எனப் பொருள் படும்.

" அரசாங்க அதிபர் " மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர் எனப் பொருள்படும்.

" சுகாதார வைத்திய உத்தியோகத்தர் " என்பது தம்புள்ள சுகாதார உத்தியோகத்தர் எனப் பொருள்படும்.

" உதவிப் பொலீஸ் அதிபர் " என்பது மாத்தளை உதவிப் பொலீஸ் அதிபர் எனப் பொருள்படும்.

" வட்டாரக் குரு " என்பது வஹகோட்டைப் புனித அந்தோனியார் தேவாலய வட்டாரக் குருவானவர் எனப் பொருள்படும்.

3. இவவொழுங்கு விதிகள் மாத்தளை மாவட்ட புனித அந்தோனியார் தேவாலய ஒவ்வொரு யாத்திரைகளும் பொருந்தும்.

4. வ டிப்பிரதேசம் வட்டாரக் குருவானவரின் பொதுக்கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். உதவிப் பொலீஸ் அதிபரும், சுகாதார வைத்திய உத்தியோகத்தரும் குருவானவர்க்கு உதவியாக இருப்பர். இவர் இல்லாத வேலைகளில் அப்பொழுது அவ்வாடிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருக்கும் வட்டாரக் குருவானவரின் பொறுப்பிலிருக்கும். இவ்வொழுங்கு விதியின் கீழ் " அரசாங்க அதிபர் " " உதவிப் பொலீஸ் அதிபர் " " சுகாதார வைத்திய உத்தியோகத்தர் " ஆகிய அதிகாரிகளின் அதிகாரங் களை, அவர்கள் இல்லாதவிடத்து முறையே " கலேவெல காரியாதிகாரி " " வாடிப்பிரதேசத்திலுள்ள சிரேஷ்ட பொலீஸ் உத்தியோகத்தர் ", " பொதுசன சுகாதார பரிசோதகர் " ஆகியோரால் கவனிக்கப்படும்.

5. வட்டாரக் குருவானவருக்குக் கீழ்க்காணப்படும் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன :—

(அ) கழுவுவதற்கும் குடிப்பதற்கும் குடி தண்ணீர் எடுத்துக் கொள்ள வும் வீட்டுப் பாவிப்பிற்கும் பிரத்தியேக இடங்களை நியமித்தல்.

(ஆ) ஒவ்வொரு தரப்பட்ட யாத்திரீகர்கட்கும் புறம்பான வதிவிடங்கள் நியமித்தல்.

(இ) யாத்திரீகர்கட்கு உணவு விநியோகம் செய்தலை ஒழுங்கு படுத்தல்.

(ஈ) நோய பீடிக்கப்பட்டுள்ள யாத்திரீகர்கள் தங்குவதற்குப் பிரத்தியேக இடங்கள் அமைத்தலும், நோய் பரவாமல் இருத்தற் பொருட்டு மற்றவர்கள் அவர்களுடன் தொடர்பு கொள்ளாதவாறு தடுத்த லும், அவர்கள் பிரயாணம் செய்ய முடியாதவர்களாய் உள்ள விடத்து அவர்களைத் தடுத்து வைத்தலும்.

(உ) வண்டிகள், மாடுகள், பஸ், கார் ஆகிய மோட்டார் வாகனங்கள் தரிப்பதற்குப் புறம்பான இடங்கள் நியமித்தலும் ஏனைய இடங் களைப் பாவித்தற்குத் தடை விதித்தலும்.

(ஊ) போசனை சாலைகள், சாவடிகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கும், மிருகங்கள் பறவைகள் ஆகியவற்றை அறுப்பதற்கும் புறம்பான இடங்கள் நியமித்தலும் ஏனைய இடங்களைப் பாவித்தற்குத் தடை செய்தலும்...

6. வட்டாரக் குருவானவர் அவர்களால் அதற்கென குறித்த இடத்தி லன்றி வேறு எந்த இடத்திலும் மலசலம் கழித்தலாகாது.

7. வாடிப்பிரதேசத்தினுள் அதற்கென வட்டாரக் குருவானவரின் அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்ட இடத்திலோ அல்லது கொள்கலத்திலோ அன்றி மற்று எங்காயினும் எவரேனும் எப் பிற கழிவுப் பொருட்களையும் வீசலாகாது.

8. எவராவது கீழே காணப்படுவனவற்றை வாடிப்பிரதேசத்திலிருந்து ஒரு மைலுக்குள் நிர்வகித்தலோ, கொண்டு நடத்தலோ, விற்றலோ தடை செய்யப்பட்டுள்ளது :—

(1) கேளிக்கைகளும் நடனங்களும்.

(2) நாடகங்கள்.

(3) சூது விளையாடலும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பும்.

(4) மதுபானம் விற்றல்.

(5) ஒலி பெருக்கிகள் மூலம் விளம்பரம் செய்தல்.

(6) சமயப்படி கத்தோலிக்கருக்கெதிரான புத்தகங்கள் விற்பனை செய்தல்.

9. எவராவது வாடிப்பிரதேசத்தினுள் கீழ்க்காணப்படுவனவற்றை செய்தல் தடுக்கப்பட்டுள்ளது :—

(1) குறிக்கப்பட்ட இடத்திலன்றி எவராயினும் எவ்வித பண்டங்களையும் விற்பனைக்கு வைத்தலாகாது.

(2) வியாபாரப் பொருட்களை குறிப்பிட்ட இடத்திலன்றி வேறிடத்தில் விற்பனை செய்தல்.

(3) தென்னைகள் உட்பட மரக் கிளைகள் வெட்டுதல்.

(4) தேவாலய பூசைக்குக் குந்தகம் விளைக்கக் கூடிய பொருட்களை விற்பனை செய்தல்.

(5) சமய பூசைக்குச் சம்பந்தமில்லாத பாட்டுக்களையும், பாட்டுக் கச்சேரிகளையும் ஒழுங்கு செய்தலும், அவற்றில் பங்கு பற்றுவதும்.

(6) மது போதையில் இருத்தல், யாத்திரீகர்களுக்கு பங்கம் விளை வித்தல்.

10. (1) வாடிப்பிரதேசத்தினுள் வட்டாரக் குருவானவர்களால் குறிக் கப்பட்ட இடத்திலன்றி எவராவது எவ்வித பண்டங்களையும் விற்றலாகாது.

(2) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் உடல் நலத்திற்கொவ்வாத தென நிராகரிக்கப்பட்ட எவ்வித உணவுப் பண்டங்களையும் எவரும் விற்பனைக்கு வைத்தலாகாது.

(3) உடல் நலத்திற்கொவ்வாததென சுகாதார உத்தியோகத்தர் எண்ணும் எவ்வித உணவுப் பண்டங்களையும் பறிமுதல் செய்து அழித்து விடுதல் சட்ட முறையானதாகும்.

11. (1) போசனசாலைகள், தேநீர்க் கடைகள் துப்புரவாகவும், சுகாதார முறை அமைந்ததாகவும் வைத்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) விற்பனைக்கு வைக்கப்படும் கேக், மிட்டாய்கள் ஆகிய பண்டங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்ட கண்ணுடி அலுமாரிகளில் வைத்திருக்கப் படல் வேண்டும்.

(3) தேயிலை, காப்பி முதலியவற்றின் கழிவுகளை அல்லது எஞ்சிய உணவுப் பண்டங்களை அல்லது வேறு கழிவுப் பொருட்களை நிலத்தில் வீசலாகாது. அப்படி வீசப்பட்ட கழிவுப் பொருட்களை இதன்கீழ்வரும் விதிகளில் குறிப்பிட்ட கொள்கலமொன்றில் சேர்த்து வைத்து சுகாதார அதிகாரிகளால் எடுப்பதற்கு எந்நேரமும் தயாராய் வைத்திருத்தல் வேண்டும்.

(4) வியாபார ஸ்தாபனங்களாகப் பாவிக்கப்படும் கட்டிடங்கள் அமைப்பு கள் அல்லது வேறிடங்களில் உலோகத்தால் அல்லது மரத்தால் ஆக்கப் பட்டதும் 4½ கன அடிக்குக் குறைவில்லாததும் ஆன குப்பைத் தொட்டிகள் வைக்கப்படுதல் வேண்டும். கழிவுப் பொருட்கள் போடும் போதும் எடுக்கும் போதும் ஆகிய நேரங்களைத் தவிர்த்து எந்நேரமும் உலோகத்தால் அல்லது மரத்தாலான மூடியால் மூடி வைக்கப்படுதல் வேண்டும்.

12. தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்ட எவரும் வாடிப்பிரதேசத்தினுள் பிரவேசித்தலாகாது.

13. தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவர்களை வாடிப்பிரதேசத்தினுள் கொண்டு வருதல் அல்லது அந்நோயாளர் உட்புகுவதற்கு எவரேனும் உதவி செய்தல் அல்லது உடந்தையாயிருத்தல் ஆகாது.

14. உற்சவ காலத்தில், வாடிப்பிரதேசத்தில் கொள்ளை நோய் பரவக் காணப்பட்டால் யாத்திரீகர்களை அவ்விடத்திலிருந்தும் வெளியேறும் படி பணித்தலும் அவர்கள் போக வேண்டிய வழியையும் வாகனங்களையும் குறிப்பிடுதலும் அரசாங்க அதிபரும், வட்டாரக் குருவானவரும், சுகாதார வைத்திய உத்தியோகத்தரும் சட்டப்படி செய்யக்கூடியவர்களாவர்.

15. வாடிப்பிரதேசத்தில் தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப்பட்டவரும் தம்மோடு வதிந்து வரும் நபருக்கு தொற்று நோய் அல்லது ஒட்டு நோய் உண்டென்பதை அறிந்தவரும் அச்சம்பவத்தை சுகாதார வைத்திய உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

16. வட்டாரக் குருவானவர்களின் அனுமதியின்றி எவராவது வாடிப் பிரதேசத்தினுள் ஏதாவது சாவடி அல்லது கட்டிடங்களை, வாடிப் பிரதேசத்தினுள் உள்ள வீதியை அத்து மீறக்கூடியவகையில் கட்டுதலாகாது.

17. மனிதனின் தேவைக்காக எந்தவொரு மிருகத்தையும் வாடிப் பிரதேசத்தினுள் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலன்றி வேறெவ்விடத் திலும் அறுத்தலாகாது. அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட எந்த இடத்திலும் மிருகங்களை அறுப்பவர்கள் தாங்களே அந்த இடத்தைச் சுத்தப்படுத்த வேண்டியவராவர்.

18. உதவிப் பொலீஸ் அதிபரின் உத்தரவின்றி வாடிப்பிரதேசத்தி னுள்ளோ அல்லது அப்பிரதேசத்திலிருந்து ஒரு மைல் தூரத்தினுள்ளோ எவராவது வாணங்கள் கொழுத்துவதோ, துவக்கு வெடி வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

19. (1) மேற்காணப்படும் உற்சவ தினத்தில் அல்லது ஊர்வலம் நடை பெறும் எனக் கருதும் தினங்களில் கீழ்க்காணப்படும் விதிகள் நடை முறையிலிருக்கும்.

(2) தேவாலயப் பிரமுகரினதோ, சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக் களத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களைத் தவிர வேறு மோட்டார் வாகனங்கள் தேவாலய வளவினுள் பிரதான வாசலால் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. தவிர எந்தவொரு மோட்டார் வாகனமாவது தேவாலயத்தின் முன்றலிலோ அல்லது பக்கத்திலோ நிற்றலோ, நிறுத்தி வைத்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.

(3) 5 (உ), 19 (2) விதிகளில் காணப்படும் கடமை உடையுடன் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலீஸ் உத்தியோகத்தர் மோட்டார் வாகனங்களை நிறுத்தும்படியோ, பின் செல்லும் படியோ, வேகத்தைக் குறைக்கும்படியோ, திருப்பிச் செலுத்தும்படியோ, ஒழுங்காக ஒரு பக்கத்தில் செல்லும் படியோ காண்பிக்கப்படும் சைகைகளை எல்லா மோட்டார்ச் சாரதிகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதிகளில் மோட்டார் வாகனம் என்பது (203 ம் அத்தியாயமான) மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாகும்.

### அட்டவணை

மாத்தளை மாவட்டத்தின் கலேவெல காரியாதிகாரி பிரிவிலுள்ள வஹகோட்டை கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கிய வஹகோட்டை முழுப் பிரதேசமும் வாடிப் பிரதேசம் எனப் பொருள்படும். அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : புத்சாணப்பிட்டியிலிருந்து வஹகோட்டை கலுகல, தம்பி ஹிட்டியாவகும்புர வரையுள்ள கிராமச் சங்க வீதி.

தெற்கு : அக்குறம்பொட ஊடாக கலேவெல–மாத்தளை செல்லும் அரசாங்க பொது வேலைத்திணைக்கள வீதி.

கிழக்கு : வஹகோட்டைக் குளம்.

மேற்கு : புத்சாணப்பிட்டியிலிருந்து வஹகோட்டை கலுகல நோக்கிச் செல்லும் கிராமச் சங்க வீதி.

3–99/2

---

இல. : 543 இ/141 டி (பாகம் vii).

உபகாரச்சம்பளப் பிரமாணக் குறிப்புக்களின் II ஆம் பிரிவின் பிரகாரமும் சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக் கமையவும், இதனகத்துள்ள பட்டோலையின I ஆம் பத்தியில் தரப் பட்டுள்ள பதவிகளொவ்வொன்றையும், அப்பட்டோலையின் II ஆம் பத்தியில் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள திணைக்களத்தில் வகிப் பவரும், அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து உபகாரச் சம்பளத்திற்குத் தகவுடையவராவரென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

எம். இராசேந்திரா,
திறைசேரிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 25 ந் வ.

### பட்டோலை

| பத்தி I | பத்தி II |
|---|---|
| பண்ணைக் கண்காணிப்பாளர் .. | கமத்தொழில் திணைக்களம் |
| பட அச்சாளர் (1968.7.1 ஆந் தேதி முதல்) | கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு |
| போக்குவரத்துச் செலவுக் கணிப்பு முதன்மை உத்தியோகத்தர் | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் |
| போக்குவரத்துச் செலவுக் கணிப்பு உத்தியோகத்தர் | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் |
| விற்பனை முகாமையாளர் | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் |
| சந்தைப்படுத்தல் உதவியாளர் | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் |
| விற்பனைப் பிரதிநிதி | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் |
| நூல்நிலையப் பொறுப்பாளர் (நிறுவல், முறைப் பகுதி) | பொதுத் திறைசேரி |

3–130

## இணக்கச் சபைகள் சட்டம்
### கட்டளை

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளேயின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1969 சனவரி 13 ஆந் தேதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களேக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினு மரிக்கார் ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1969 யூலே 4 ஆந் தேதிய 14,861 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணேயில் 8 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட பின்னவலேக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களே உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. கேகாலே, ரன்தெனியவைச் சேர்ந்த திரு. காவின் கிளிபட் சுசந்தா ராஜபக்ச.
2. கேகாலே, திம்புல்கமுவையைச் சேர்ந்த திரு. விஜேசிங்க கெதர குணதாச.
3. கேகாலே, நில்வத்தையைச் சேர்ந்த திரு. லேகம் ரால்லாகே டிங்கிரி அப்புகாமி.
4. கேகாலே, கரண்டுபனே, "சாமய" இல் வசிக்கும் திரு. வன்னி ஆரச்சில்லாகே உக்கு பண்டா குணதிலக.
5. கிரிவடுன்னே, "மாதன வளவ்வ" இல் வசிக்கும் திரு. கிட்டி பண்டார மகன்தே முதியன்செராலகாமில்லாகே தர்மசேன மாதன.
6. கிரிவடுன்னே, தியகமை, "இங்ககிரி" இல் வசிக்கும் திரு. பெரும்படபேடிகே சுகதபால.
7. கேகாலே, புவக்தெனியவைச் சேர்ந்த திரு. சமரகோன் முதியன்சேலாகே பொடிராலகாமி சமரகோன்.
8. கிரிவடுனே, ரன்தெனியவைச் சேர்ந்த திரு. கேனகரால்லாகே சமரபால ரன்தெனிய.
9. கேகாலே, புவக்தெனியவைச் சேர்ந்த திரு. அதாவுத அச்சில்லாகே புஞ்சிபண்டா பஸ்நாயக.
10. மொலகொடை, பல்பாதையைச் சேர்ந்த திரு. குறீமனுவே நரசிங்க ஆராச்சிகே குணரத்ன.
11. கேகாலே, புவக்தெனி, "நிகதென்ன" இல் வசிக்கும் திரு. முதியன்சே ராலகாமில்லாகே திசாநாயக.
12. மொலகொடை, இவுல்பனேயைச் சேர்ந்த திரு. கெகெல்பன்னல ரால்லாகே ரம்பண்டா.
13. மொலகொடை, மாகொடையைச் சேர்ந்த திரு. சமரக்கொடிகே கருணரத்ன.
14. கேகாலே, தெட்டவலேயைச் சேர்ந்த திருமதி அயிரங்கனி வேரகே.
15. ரம்புக்கனே, கிரிவன்தெனியவைச் சேர்ந்த திரு. கேனகரால்லாகே உக்குரால.
16. கிரிவடுன்னே, கல்பிட்டியைச் சேர்ந்த திரு. சிறிசேன பண்டா கிட்டிகாமு.
17. கிரிவடுன்னே, கரந்தகஸ்தென்னவத்தை, கபுகொடையைச் சேர்ந்த திரு. ரனேபுர தேவகே விமல விஜேசேன.
18. மொலகொடை மங்கலகமையைச் சேர்ந்த திரு. முகந்திரம் கல்லத்தலாகே கழு அப்பு மங்கலகம.
19. ரம்புக்கனே, சோதகமையைச் சேர்ந்த திரு. ஜயசிங்க ஆராச்சில்லாகே முதியன்சே.
20. ரம்புக்கனே, கொட்டகமையைச் சேர்ந்த திரு. ரத்நாயக முதியன்சேலாகே பொடிராலகாமி ரத்நாயக.
21. கேகாலே, கரண்டுபொனே, "காலசம்பா" இல் வசிக்கும் திருமதி சோமா ரணவீர.
22. மொலகொடை, கல்பொலேயைச் சேர்ந்த திரு. கெட்டியாராச்சில்லாகே புஞ்சி பண்டா.
23. மொலகொடை, கெரமிட்டிபானேயைச் சேர்ந்த திரு. மங்கலகமை கம்லத்லாகே திஸ்ச மங்கலகம.
24. மொலகொடையைச் சேர்ந்த திருமதி தனுக்குவே கங்கானமலாகே சந்திரா சமரசிங்க.
25. மொலகொடை, வராகொடையைச் சேர்ந்த திரு. ஜயசிங்க ஆராச்சிகே அசோக ஜயசிங்க,
26. மொலகொடையைச் சேர்ந்த திரு. பியன்கம ஆராச்சிகே ஆரியதாச பெரேரா.
27. மொலகொடை, கும்பல்திவெலேயைச் சேர்ந்த திரு. அழககோன் முதியன்சேலாகே சாம் ஜயசூரிய.
28. கிரிவடுன்னே, அனுகேவெலே, எலிபாதையைச் சேர்ந்த திரு. வலிசிங்க தேவகே ஜூலிஸ்.
29. கேகாலே, எலிவலேயைச் சேர்ந்த திரு. வரகாபிட்டி முதியன்செலாகே செனவிரத்ன பண்டா.
30. கிரிவடுன்னே, மாதனேயைச் சேர்ந்த திரு. மகன்னே முதியன்சேருலகாமில்லாகே சேனுரத்ன பண்டா மாதன.
31. ரம்புக்கனே, பதப்புரேயைச் சேர்ந்த திரு. முதியன்சே விமலதர்ம.
32. ரம்புக்கனே, பின்னவலேயைச் சேர்ந்த திரு. பின்னவல கட்டுககயலாகே ஜோன்.
33. கிரிவட்டுனனே, ரன்தெனியவைச் சேர்ந்த திருமதி பொடிமெனிகே யாரலந்த.
34. கேகாலே. நிலவத்தையைச் சேர்ந்த திரு. சேனுரத்ன பண்டா பாலசூரிய.
35. கேகாலே, புவக்தெனிய "அமித நிவச" ஐச் சேர்ந்த திரு. ஏகநாயக முதியன்செலாகே திக்கிரிபண்டார விஜயகோன்.

(ஆ) கேகாலே, ரன்தெனியயைச் சேர்ந்த காவின் கிளிபட் சுகந்தா ராஜபக்ச அவர்களே மேற்சொன்ன குழாத்தின் தலேவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் முற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளே கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன.

எம். எச். எம். நெயினு மரிக்கார்,
நீதி அமைச்சரின் பாராளுமனறச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு பெப்புரவரி மீ 24 ந் உ.

3–94—

---

## கடை, காரியாலய ஊழியர் (வேலே, வேதனம் ஒழுங்குபடுத்தல்) அதிகாரச் சட்டம்

### 29 (3) ம் பிரிவிற்கமைய அறிவித்தல்

இதன்கீழ் குறிக்கப்பட்ட நிருணயத்தினகத்தேயுள்ள அட்டவணேயிற் குறிக்கப்பட்ட, பெட்ரோல் நிரப்பு நிலேயமொவ்வொன்றினதும் தொழிலில் அல்லது அத்தொழிலேயொட்டி வேலேக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் தொடர்பான வேதனமன்றத்தினுல் ஆக்கப்பட்டு, (129 ம் அத்தயாயமாகிய) கடை, காரியாலய ஊழியர் (வேலே, வேதனம ஒழுங்குபடுத்தல்) அதிகாரச் சட்டத்தின் 28 ம் பிரிவின்படி உறுதிப்படுத்தப்பட்ட இந்நிருணயம், தொழில், தொழில் வசதி அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டதென அக்கட்டளேச் சட்டத்தின் 29 (3) ம் பிரிவுக்கமைய இத்தால் அறிவிககப்படுகிறது.

ஜீ. பீ. தம்பையா,
நிரந்தரச் செயலாளர்,
தொழில, தொழில் வசதி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 3 ந் உ.

### நிருணயம்

1. இந் நிருணயமானது, இதனகத்தேயுள்ள அட்டவணேயிற் குறிக்கப்பட்ட பெட்ரோல் நிரப்பு நிலேயங்களின் தொழிலில் அல்லது தொழிலேயொட்டி வேலேக்கமர்த்தப்பட்டுள்ள இதனடியிற் கண்ட ஊழியரின் வகுப்புகளுக்கு இயைபுடையதாயிருத்தல் வேண்டும் :—

1. முகாமையாளர்,
2. பண்டசாலேப் பொறுப்பாளர்—காசாளர்,
3. உதவிப் பண்டசாலேப் பொறுப்பாளர்—காசாளர்,
4. இலிகிதர்,
5. பம்புப் பரிசரர்,
6. தொழிலாளி,

2. I ம் பந்தியிற் குறிக்கப்பட்ட யாதாயினுமொரு பெட்ரோல் நிரப்பு நிலையத்தின் தொழிலில் அல்லது அத்தொழிலையொட்டி வேலைக்கமர்த்தப்பட்டுளள எவருக்கும் கொடுபடவேண்டிய கீழெல்லை வேதன வீதம் இதனடியிற் குறிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும் :—

| ஊழியரின் வகுப்பு | ஒரு மாதத்திற்குக் கீழெல்லை வேதன வீதம் | |
|---|---|---|
| | ரூபா | ச. |
| முகாமையாளர் .. .. .. | 350 | 0 |
| பண்டசாலைப் பொறுப்பாளர்—காசாளர் .. | 300 | 0 |
| உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர்—காசாளர் .. | 225 | 0 |
| இலிகதர் .. .. .. | 155 | 0 |
| பம்புப் பரிசரர் .. .. .. | 130 | 0 |
| தொழிலாளி .. .. .. | 105 | 0 |

3. இந்நிருணயத்தின் நோக்கத்திற்காக,—

" முகாமையாளர் " என்பது பெட்ரோல் நிரப்பு நிலையத்தில் யாவற்றிற்கும் பொறுப்பாயுள்ள ஒருவர் எனப் பொருள்படும்.

" பண்டசாலைப் பொறுப்பாளர்–காசாளர் " என்பது சகல கையிருப்புகளுக்கும், உரோக்கத்திற்கும் பொறுப்பாயுள்ள ஒருவரெனப் பொருள்படும்.

" உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர்–காசாளர் " என்பது பண்டசாலைப் பொறுப்பாளர்–காசாளர், அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் உதவி புரிதற்கு அமர்த்தப்பட்டுள்ள ஒருவரெனப் பொருள்படும்.

" இலிகிதர் " என்பது தட்டெழுத்து, கணக்கு வேலையுட்பட்ட எழுத்து வேலையில முறறிலும் அல்லது முக்கியமாக ஈடுபட்டுள்ள ஒருவரெனப் பொருளபடும்.

" பம்புப் பரிசரர் " என்பது வாகனங்களுக்குள் பெட்ரோல் பொருள்களைப் பாய்ச்சுதல், உறைகுழை அமுக்கத்தையும் எண்ணெய் மட்டத்தையும் சரிபார்த்தல், வாயுத் திரையைக கழுவிச் சுத்தம் செய்தல், பல்வேறுவகை மோட்டார் துணைக் கருவிகளை விற்றல் ஆகியவற்றிலும், பண்டசாலைப் பொறுப்பாளர்–காசாளரிடம் உரோக்கத்தை ஒப்படைத்தலிலும் ஈடுபடும் ஒருவரெனப பொருள்படும்.

" தொழிலாளி " என்பது தேர்ச்சியற்ற வேலை செய்வதற்கு அமர்த்தப்பட்ட ஒருவரெனப் பொருள்படும்.

**அட்டவணை**

1. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 161, பாசன்ஸ் வீதி, கொழும்பு 2.
வியாபாரி : சி. எப். டி மெல அன் சன்ஸ்.

2. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 114, காலி வீதி, கொழும்பு 3.
வியாபாரி : ஸ்றூவட் எஞ்சினியர்ஸ்.

3. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 596, காலி வீதி, கொழும்பு 3,
வியாபாரி : ஈ. சி. ஈ மாடின்.

4. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 762, காலி வீதி, கொழும்பு 3,
வியாபாரி : கே. எம். விக்கிரமசிங்க.

5. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 323, காலி வீதி, கொழும்பு 3,
வியாபாரி : பீலிக்ஸ் பெரேரா அன் சன்ஸ்.

6. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 2, அல்பிரேட் ஹவுஸ் காடின்ஸ், கொழும்பு 3,
வியாபாரி : சி. தகநாயக.

7. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 292, காலி வீதி, கொழும்பு 4,
வியாபாரி : ஏ. ஆர். எம். காசிச்செட்டி.

8. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 245, பம்பலப்பிட்டி வீதி, கொழும்பு 4.
வியாபாரி : றி. ஆர். பெர்ணந்தோ.

9. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 267, காலி வீதி, கொழும்பு 4,
வியாபாரி : கே. எம். விக்கரமசிங்க.

10. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 279, காலி வீதி, கொழும்பு 4,
வியாபாரி : பிரெட் ஜயசிங்க.

11. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 144, ஹவுலொக் வீதி, கொழும்பு 5,
வியாபாரி : சி. எவ். டி மெல் அன் சன்ஸ்.

12. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 169, (171) மாயா அவெனியூ, கொழும்பு 5,
வியாபாரி யூ. டி. ஏமிஸ்.

13. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 42, ஹவ்லோக் வீதி, கொழும்பு 5.
வியாபாரி · எஸ். டீ. எஸ். ஜயசிங்க.

14. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 323, ஹவ்லொக் வீதி, கொழும்பு 6,
வியாபாரி : எஸ். ஏ. எம். மொகிதீன் அன் கோ.

15. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 343, காலி வீதி, கொழும்பு 6,
வியாபாரி : எஸ். எம். உவெல்கம.

16. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 492, காலி வீதி, கொழும்பு 6,
வியாபாரி : எம். பி. விக்கரமசிஙக.

17. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 426–462, காலி வீதி, கொழும்பு 6,
வியாபாரி : கொழும்பு–கூட்டுறவு.

18. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 37, அலெக்சாண்டிரு இடம், கொழும்பு 7,
வியாபாரி : உவை. எம். பி. இரத்நாயக்க.

19. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 25, அலெக்சாண்டிரு இடம், கொழும்பு 7,
வியாபாரி : எஸ். டீ. எஸ். ஜயசிங்க.

20. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 30, அல்பர்ட் கிரசென்ற், கொழும்பு 7,
வியாபாரி : எல். ஆர். கருணதிலக.

21. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 75, அலெக்சாண்டிரு இடம், கொழும்பு 7,
வியாபாரி : பீலிக்ஸ் பெரேரா அன் சன்ஸ்.

22. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 10, கிறீன் பாத், கொழும்பு 7,
வியாபாரி : பி. சி. பெர்ணந்தோ.

23. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 41, டீ. எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 8.,
வியாபாரி : ஈ. ஏ. பி. எதிரிசிங்க.

24. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 94, டீ. எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 8,
வியாபாரி : ஏ. ஈ. வண்டவோல் அன் கோ.

25. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 825, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9,
வியாபாரி . கூட்டுறவு எஸ். எஸ். யூ. மட்டுப்படுத்தப்பட்டது.

26. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 693, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9,
வியாபாரி : ஈ. ஏ. பீ. எதிரிசிங்க.

27. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 291, சிறீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10,
வியாபாரி : எஸ். கணபதிச் செட்டி.

28. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன் இல. 650, 2 வது பிரிவு, மருதானை, கொழும்பு 10,
வியாபாரி : கொழும்புக் கூட்டுறவு ஸ்ரோஸ் சொசைற்றி யூனியன், மட்டுப்படுத்தப்பட்டது.

29. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 680, 2 வது பிரிவு, மருதானை, கொழும்பு 10,
வியாபாரி : எச். ஜீ. டி. விஜயசிறிவர்தன.

30. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 319, சிறி சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10,
வியாபாரி : வீரக்கோன் பிரதர்ஸ்.

31. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 515, றீ. பீ. ஜயா வீதி, கொழும்பு 10,
வியாபாரி : ஈஸ்றறேன் மோட்டோர் கருஜ்.

32. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 4 பி/2, நியூ றெக்ளமேஷன் வீதி, கொழும்பு 11.
வியாபாரி : சிலோன் ஷிப்பிங் லயின்ஸ்.

33. இலங்கா பில்லிங் ஸ்றேஷன், இல. 341, நொரிஸ் வீதி, கொழும்பு 11,
வியாபாரி : கில்பர்ட் அன் றிச்சர்ட்.

34. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 29, கெய்சர் வீதி, கொழும்பு 11,
வியாபாரி : பீ. தொமஸ் சிங்கோ.

35. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 253, ஜோர்ஜ் ஆர். டீ சில்வா மாவத்தை, கொழும்பு 13,
வியாபாரி : ஈ. எஸ். பெர்ணந்தோ.

36. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 353, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13,
வியாபாரி : கொழும்புக் கூட்டுறவு ஸ்ரோர்ஸ் சொசைட்டி யூனியன், மட்டுப்படுத்தப்பட்டது.

37. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 125, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13,
வியாபாரி : பி. டி. எஸ். குணசேகர.

38. இலங்கா சேவிஸ் ஸ்றேஷன், இல. 271, பேஸ்லயின் வீதி, கொழும்பு 9,
வியாபாரி : டி. வி. விஜயசூரிய.

39. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், இல. 291, பேஸ்லயின் வீதி, கொழும்பு 9,
வியாபாரி : ஏ. சங்கதாச சில்வா.

40. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இல. 115, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு 13,
வியாபாரி : கொழும்புக் கூட்டுறவு ஸ்ரோர்ஸ் சொசைற்றி யூனியன்.

41. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இல. 502, பிறின்ஸ் ஒவ் உவேல்ஸ் அவெனியு, கொழும்பு 14. ,
வியாபாரி : வீரக்கோன் பிரதர்ஸ்.

42. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், இல. 363–379, பிறின்ஸ் ஒவ் உவேல்ஸ் அவெனியு, கொழும்பு 14.
வியாபாரி : ஜெயரத்தினம், எம். டபிள்யூ.

43. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இல. 145, ஸ்ரேஸ் வீதி, கொழும்பு 14,
வியாபாரி : எல். ஏ. பெரேரா.

44. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இல. 19, ஜேத்தவன வீதி, கொழும்பு 14,
வியாபாரி : சி. எவ். டி. மெல் அன் சன்ஸ்.

45. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், இல. 24, ஜேத்தவன வீதி, கொழும்பு 14,
வியாபாரி : கே. குணரத்தினம்/எம். இராமேஸ்வரம்.

46. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், இல. 481, ஏ, பிறின்ஸ் ஒவ் உவேல்ஸ் அவெனியு, கொழும்பு 14,
வியாபாரி : ஜே. எஸ். ஏ. பெர்னாந்தோ.

47. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இல. 84, சென்ற் அன்றூஸ் வீதி, கொழும்பு 15,
வியாபாரி : எம். டபிள்யூ. ஜெயரத்தினம்.

48. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், காலி வீதி, கொழும்பு 3.
வியாபாரி : உவாக்கர் சன்ஸ் அன் கொம்பனி மட்டுப்படுத்தப்பட்டது.

49. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், தர்மபால மாவத்தை, கொழும்பு 3,
வியாபாரி : ரேலன்ஸ் மட்டுப்படுத்தப்பட்டது.

50. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், அல்ஸ்டன் இடம், கொழும்பு 3,
வியாபாரி : பிரிட்டிஷ் கார் கொம்பனி மட்டுப்படுத்தப்பட்டது.

51. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், இராணி வீதி, கொழும்பு 1,
வியாபாரி : போகல மோட்டோர் மட்டுப்படுத்தப்பட்டது.

52. இலங்கா சேவிஸ் ஸ்ரேஷன், டின்ஸ் வீதி, கொழும்பு 10,
வியாபாரி : ஆர். எஸ். குக்.

53. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், பிரின்ஸ் ஒவ் உவேல்ண் அவெனியூ, கொழும்பு 14,
வியாபாரி : புரூேட்வே ஒடோமற்றிவ்ஸ்,

54. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், ஜேத்தவன வீதி, கொழும்பு 14.
வியாபாரி : டொன் சோமபால கோப்பரேஷன்.

55. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், பாசன்ஸ் வீதி, கொழும்பு 2,
வியாபாரி : எஸ். ஏ. எம். மொகிதீன் அன் கோ.

56. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், ஜெனறல் லேக் வீதி, கொழும்பு 2,
வியாபாரி : ஆர். ஜானகிராம் அன் கோ.

57. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், ஹைட்பாக் கோணம், கொழும்பு 2,
வியாபாரி : றிச்சட் பீரிஸ் அன் கோ.

58. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், யூனியன், இடம் கொழும்பு 2,
வியாபாரி : சி. எப். றி. எஞ்சினியரிங் உவேக்ஸ் மட்டுப்படுத்தப் பட்டது.

59. இலங்கா பில்லிங் ஸ்ரேஷன், யூனியன் இடம், கொழும்பு 2,
வியாபாரி : பிறவுண் அன் கோ., மட்டுப்படுத்தப்பட்டது.

3–180

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள கிறிஸ்டோபர் விஜித லக்ஸ்மன் செனவிரத்ன அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

3–200

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள துரைசிங்கம் ஜெயராஜசிங்கம் அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3–199

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள சிட்னி விமலசூரிய அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

3–195

---

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

**(1968 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்த) செய்சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச்சட்டம் (அதிகாரம் 453)**

கமநலச்சேவை ஆணையாளர் செனவிரத்தின பண்டா சேனநாயக்கா ஆகிய நான் 1968 ஆம் ஆண்டின் நீர்ப்பாய்ச்சல் (திருத்த) 48 ஆம் இலக்கச் செய்சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான நீர்ப்பாய்ச்சற் கட்டளைச் சட்டம் அதிகாரம் 453 இன் (இலங்கைச் சட்ட வாக்கங்கள்) படி கண்டி அரசாங்க அதிபரால் 1968 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க நீர்ப்பாய்ச்சற் (திருத்தம்) செய்சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட படியான மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப் பட்டதும் கீழ்க்குறிக்கப்பட்டிருப்பதுமான திட்டம் என்னால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

எஸ். பி. சேனநாயக்கா,
கமநலச்சேவை ஆணையாளர்.

திகதி : 18.2.1970

**சிறிய நீர்ப்பாச்சல் வேலைகளைத் திருத்தவதற்கான திட்டம்**

1. வேலையின் பெயரும் விவரணமும். தேவகன்திய சியக் பம்பே வாய்க்கால் அணைகட்டு J/21 (13·31 × 5·15).

2. இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சக் கூடிய காணியின் தன்மையும் அளவும்—தனியாருக்குச் சொந்தமான காணி : 41 அண்ணளவான ஏக்கர் அளவு: முடிக்குரிய காணி : அண்ணளவான ஏக்கர் அளவு :

3. ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் :—

(1) கீழே தரப்பட்ட மிக முக்கியமான கட்டட வேலைகளை அதாவது

(i) 100 அடி நீளமான அணைக்கட்டையும், 2 அரிப்புத்தடுப்புக் கதவுகளையும் அமைத்தல்.

(ii) சராசரி 45 அடிமுதல் 50 அடி வரை நீளமுள்ள 3 அணைக் கட்டுகளை கட்டுதல்

(/ii) 25 அடி நீளமுள்ள அணைக்கட்டைக் கட்டுதல்

(iv) வாய்க்கால் நீளம் ஒரு தாங்கு சுவரைக்கட்டுதல். மதிப்பிடப் பட்ட செலவாகிய ரூபா. 36,000 வரைக்கும் அரசாங்கத் தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேற்சொன்னவாறு அரசாங்கம் பொறுப்பேற்றமைக்குக் கைம்மாறு காணித்துண்டு பெற்றவரும் குடிநில உரிமை யுள்ள விவசாயிகளும் எக்காணியிலும் காணி பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயிகளோ இல்லாதவிடத்து அக் காணிகளின் சொந்தக்காரர்கள், இக்கட்டட வேலைகள் முடிந் ததன் பின் எதுவித வேதனமுமின்றி இவற்றைப் பேணு வதற்கும் திருத்துவதற்குமான கூலியாளர்களைக் கொடுத் துதவுதல் வேண்டும்.

(3) இத்திட்டத்தின் கீழ் தங்கள் பங்கைச் செலுத்துவதில் காணித் துண்டு பெற்றவரோ குடிநில உரிமையுள்ள விவசாயியோ, இவர்களில்லாத விடத்துக் காணியின் சொந்தக்காரரோ தவறுவாராயின் இப்படியான வேலையை வேறு ஒருவரைச் செய்ய அரசாங்க அதிபர் பணித்து இதனால் ஏற்படும் செல வினை இக்கட்டளைச் சட்டத்தின் VII ஆம் பாகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடலாம்.

3–194

## கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

**கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 124)**

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச்சட்டத்தின் 52 (2) வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பதற்கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது

| | | கலைக்கப்பட்ட தேதி |
|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட வாரப்பிட்டியா கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. | 6.12.69 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட இன்பூல்பிட்டிய தோட்ட ஊழியர் கூட்டுறவு சிக்கனச் சங்கம் .. .. | 6.12.69 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட ஹன்வெல்ல பள்ளவெல கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 6.12.69 |
| 4. | மட்டுப்படுத்தப்படாத தலுபோதகம கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 6.12.69 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட பட்டுகம்பொல கால்நடை சங்கம் .. | 6.12.69 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட டக்குவாரித் தோட்டம் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 10.12.69 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட டிம்புல்வல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 4. 1.70 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட வெரகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 0 .. .. .. | 4. 1.70 |
| 9. | மட்டுப்படுத்தப்பட்ட நந்துரான இளவிவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 4. 1.70 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட மெடதும்பற கிராம அதிகாரிகள் கூட்டுறவு சிக்கன சங்கம் .. .. | 4. 1.70 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்ட மாரவனகொட திம்புல்கும்புற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 4. 1.70 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட அளுத்வேவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 10. 1.70 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட டக்குனு கெபில்லாவெல கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கம் .. .. | 11. 1.70 |
| 14. | மட்டுப்படுத்தப்பட்ட வான்கலை அர்ச் என்ஸ் வலை பின்னுவோர் சங்கம் .. .. .. | 12. 1.70 |
| 15. | மட்டுப்படுத்தப்பட்ட குருநாகலை கூட்டுறவு பண்டசாலைச் சங்கம் .. .. .. | 13. 1.70 |
| 16. | மட்டுப்படுத்தப்பட்ட யாத்தகிந்த கூட்டுறவு கடனுதவு சங்கங்களின் சமாசம் .. .. | 13. 1.70 |
| 17. | மட்டுப்படுத்தப்படாத கள்ளிஞுவத்த கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 21. 1.70 |
| 18. | மட்டுப்படுத்தப்பட்ட இம்புல்பே விசாக குலங்கான சிக்கனமும் சேமிப்பும் சங்கம் .. .. | 24. 1.70 |
| 19. | மட்டுப்படுத்தப்பட்ட அம்பல்லே தொருலியாட்ட சிகரெட் புகையிலை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் .. | 24. 1.70 |

ஆர். பி. ராஜகுரு,
கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பிரதி பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. 419,
கொழும்பு 1,
1970 ம் ஆண்டு பெப்ரவரி மீ 28 ந் உ.

3–47

---

## இலங்கைச் சேமிப்பு வங்கி

**வட்டி விகிதம்**

பணவைப்பாளர்களுக்கு 1970 ம் ஆண்டு சேமிப்பு வைப்புப் பணங்களுக்கு 4 சதவீத வட்டியும், நிலையான வைப்புப் பணங்களுக்கு 4½ சதவீத வட்டியும் கொடுக்கப்படுமென இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

கட்டளைப்படி,
தி. ஜே. காரியவசன்,
முகாமையாளர்.

இலங்கைச் சேமிப்பு வங்கி,
கொழும்பு,
1970 ம் ஆண்டு (மாச்சு) பங்குனி மீ 13 ந் உ.

3–158

## இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நவதுன் கோறளை குருவிட்ட கோறளை பிரிவுக் காரியாதிகாரிகளின் பகுதிகளைத்திருப்பிப் பிரித்தல்

1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந் திகதி முதல் நவதுன், குருவிட்ட கோறளைகளின் பிரிவுக் காரியாதிகாரிகளின் பகுதிகள் இரத்தினபுரி பிரதேச காரியாதிகாரி பிரிவு, குருவிட்ட கோறளைப் பிரதேச காரியதிகாரி பிரிவு, நவதுன் கோறளை பிரதேச காரியாதிகாரி பிரிவு என மூன்று பிரிவுக் காரியதிகாரிகளின் பிரிவுகளாகத் திருப்பிப் பிரிக்கப்பட்டுள்ளனவென்பதை இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

2. (அ) இரத்தினபுரி பிரதேச காரியாதிகாரி பிரிவு பின்வரும் கிராம சேவையாளர்களின் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும் :

பிரிவு இல. 151—தேவாலகாவ
152—கொடிகமுவ
152எ—இரத்தினபுரி பட்டணம்
153—அல்லெகெதற
162—கிலீமலே வடக்கு
162எ—குடாவ
163—கிலீமலே தெற்கு
164—பம்பரபொட்டுவ குடாபாகே மேற்கு
164எ—பம்பரபொட்டுவ குடாபாகே கிழக்கு
165—பம்பரபொட்டுவ மகாபாகே
182—மூவகம
183—கங்கமுவ
184—நிரிஅல்ல
185—அலபாத
187—றத்தல்ல
188—தெல்லபட
189—தம்புலுவன

(ஆ) குருவிட்ட கோறளை காரியாதிகாரி பிரிவு பின்வரும் கிராம சேவையாளர்களின் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும் :

பிரிவு இல. 136—கெந்தங்கமுவ இகலகம
136எ—கெந்தங்கமுவ பட்டினம்
137—வலவிட்ட
138—இத்தமல்கொட
139—கலட்டுவாவ மேற்கு
139எ—கலட்டுவாவ கிழக்கு
140—கெந்தங்கமுவ பகலகம
141—புளுககபிரிய
142—கிரிபோறுவ
142எ—கிந்துறன்கல
143—கறந்தன வடக்கு
143எ—கறந்தன தெற்கு
144—யடிபவ்வ
145—கிரிஅல்ல
146—தலாவிட்டிய
147—எல்லாவல
148—பொகொறபாவ
149—முதுன்கொட்டுவ
150—தொடம்பே
154—வலந்துற
155—குருவிட்ட
156—தெப்பளுவ
157—கெந்தங்கொட வதுயாய
158—புஸ்ஸல்ல
160—அந்திரியன்வல
161—எறத்ன

(இ) நவதுன் கோறளை காரியாதிகாரி பிரிவு பின்வரும் கிராம சேவையாளர்களின் பிரிவுகளைக் கொண்டதாகவிருக்கும் :

பிரிவு இல. 166—குட்டாப்பிட்டிய
167—கனேகம
168—தெனவக உடகட
169—மொறதொட
170—பணுவன்ன
171—தெனவக பாதகட
172—லெல்லோபிட்டிய
173—கறவிட்ட
174—நிவித்திகல
175—நொறகல்ல
176—தொளஸ்வல
177—தெல்வல
178—போபத்த
179—மாறபன
180—கக்கமுவ
181—பட்டுகெதற

3. பின்வரும் மாநகர சபை, நகர சபை, கிராமச் சபை பிரதேசங்கள் அந்தந்த பிரதேசக் காரியாதிகாரியின் பிரிவுக்குள் அடங்கும்.

(அ) இரத்தினபுரி பிரதேச காரியதிகாரி பிரிவு : இரத்தினபுரி மாநகர சபைப் பிரதேசத்தின் பகுதி, குருவிட்ட கிராமசபைப் பிரிவின் பகுதி, கிலிமலே கிராமசபையின் பகுதி, பம்பரபொட்டுவ கிராம சபை பிரதேசம், நவதுன் கோறளே பள்ளே பத்து கிராமசபை பிரதேசம், ஆகியவை.

(ஆ) குருவிட்ட கோறளைப் பிரதேச காரியாதிகாரியின் பிரிவு :குருவிட்ட கோறளைப் பள்ளே பத்து கிராமசபைப் பிரதேசம், குருவிட்ட கோறளே மதபத்து கிராமசபை பிரதேசம், எல்லாவள கிராமசபை பிரதேசம், குருவிட்ட கிராமசபை பிரதேசத்தின் பகுதி, கிலிமலே கிராமசபை பிரதேசத்தின் பகுதி ஆகியன.

(இ) நவதுன் கோறளைப் பிரதேச காரியாதிகாரியின் பிரிவு : இரத்தின புரி மாநகர சபையின் பகுதி, பல்மதுலல பட்டினசபை பிரதேசத் தின் பகுதி, மாறபன கிராமச்சபை பிரதேசத்தின் பகுதி, பல்மதுல்ல கிராமச்சபை, நிவித்திகல கிராமச்சபை ஆகியன.

4. பின்வரும் கிராமக்கோடு அந்தந்த பிரதேச காரியாதிகாரியின் பிரிவுகளில் நீதிபரிபாலனம் செய்வனவாகும் :

(அ) இரத்தினபுரி பிரதேச காரியதிகாரி பிரிவு :
1. குருவிட்ட கிராமக் கோடு.
2. கொட்டாமுள்ள கிராமக் கோடு.

(ஆ) குருவிட்ட கோறளே பிரதேச காரியாதிகாரி பிரிவு.
1. அகலியகொட கெந்தங்கமுவ கிராமக் கோடு.
2. குருவிட்ட கிராமக் கோடு.
3. கிரிஅல்ல கிராமக் கோடு.

(இ) நவதுன் கோறளே பிரதேச காரியாதிகாரி பிரிவு :
1. பல்மதுல்ல கிராமக் கோடு.
2. மாறபன கிராமக் கோடு.

5. இப்புதிய பிரிவுக் காரியாதிகாரிகளின் பிரிவில் பின்வரும் தேர்தல் மாவட்டங்கள் அமைந்துள்ளன :

(அ) இரத்தினபுரி பிரதேச காரியதிகாரி பிரிவு :
1. இல. 139 — இரத்தினபுரி தேர்தல் பிரிவின் பகுதி.
2. இல. 140 — பல்மதுல்ல தேர்தல் பிரிவின் பகுதி.
3. இல. 143 — நிவித்திகல தேர்தல் பிரிவின் பகுதி.

(ஆ) குருவிட்ட கோறளே பிரதேச காரியாதிகாரி பிரிவு :
1. இல. 138 — கிரிஅல்ல தேர்தல் பகுதி.
2. இல. 139 — இரத்தினபுரி தேர்தல் பிரிவின் பகுதி.

(இ) நவதுன் கோறளைப் பிரதேச காரியாதிகாரி பிரிவு :
1. இல. 139 — இரத்தினபுரி தேர்தல் பிரிவின் பகுதி.
2. இல. 140 — பல்மதுல்ல தேர்தல் பிரிவின் பகுதி.
3. இல. 143 — நிவித்திகல தேர்தல் பிரிவின் பகுதி.

6. ஒவ்வொரு புதிய காரியாதிகாரியினதும் அலுவலகம் பின்வரும் ஸ்தானத்தில் அமைந்திருக்கும்.

(அ) இரத்தினபுரி பிரதேச காரியாதிகாரி பிரிவு — இரத்தினபுரி.

(ஆ) குருவிட்ட கோறளே பிரதேச காரியாதிகாரி பிரிவு — குருவிட்ட.

(இ) நவதுன் கோறளைப் பிரதேச காரியாதிகாரி பிரிவு — பட்டுகெதற.

எ. ஈ. கோகலி மொறகொட,
உள்நாட்டு அலுவல் அமைச்சின் நிரந்தரக் காரியாதரிசி, கொழும்பு.

உள்நாட்டு அலுவல் அமைச்சு,
கொழும்பு 7,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 1 ந் வ.

3–104

---

## கொழும்பு மாவட்டத்தின் வடக்கு அளுத்குறு கோறளே " ஏ " பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதியின் கிராம சேவகர் பகுதியை புனர் நிர்மாணஞ் செய்தல்

1970 மார்ச்சு மாதம் 15 ம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்டத்தின் வடக்கு அளுத்குறு கோறளே " ஏ " பெரும்பாக இறைவரி உத்தியோகத் தர் பகுதியில் 57 ம் இலக்கக் கொடிகமுவ கிராம சேவகர் பகுதியொன்று உண்டெனப் பொது மக்களின் கவனத்திற்கு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

(அ) கீழ்க்காணப்படும் கிராமங்கள் 57 ம் இலக்கக் கொடிகமுவ கிராம சேவகர் பகுதிக்குட்படும் :—

(1) கொடிகமுவ கிழக்கு, பலவல.
(2) கலேவத்த.
(3) கொடிகமுவ மேற்கு.
(4) கீழ் ஓத்தற வாடிய.

2. இக்கிராமசேவகர் பகுதிகு நீதி பரிபாலனம் செய்யும் மஜிஸ்திரேட் நீதிமன்றம், கிராமச் சபைகள், கிராமீய நீதிமன்றம், பொலிஸ் பிரிவு, பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் பகுதி, உள்ளூராட்சி நிறுவனம், தேர்தல் மாவட்டம் ஆகியவை சகலருடைய கவனத்திற்காகவும் கீழே குறிப்பிடுகின்றேன்.

| கிராமசேவகர் பகுதி | மஜிஸ்ரேட் நீதிமன்றம் | கிராம நீதிமன்றம் |
|---|---|---|
| 57, கொடிகமுவ | .. நீர்கொழும்பு | .. கட்டான |

பொலிஸ் பிரிவு

| | |
|---|---|
| (1) கொடிகமுவ கிழக்கு, பலவல | — திவுலப்பிட்டிய. |
| (2) கலேவத்த<br>(3) கொடிகமுவ மேற்கு<br>(4) கீழ் ஓத்தறவாடிய | கொச்சிக்கடை |

| பிறப்பு, இறப்பு விவாக பதிவாளர் பகுதி | உள்ளூராட்சி நிறுவனம் | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|
| .. ஓத்தற கிழக்கு | கெகெல் அல்ல கிராமச் சபை | 8—திவுலப்பிட்டிய |

டி. ஆர். உமகிளிய,
அரசாங்க அதிபர், கொழும்பு மாவட்டம்.

கொழும்புக் கச்சேரி,
1970 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் வ.

3–177

---

## களுக்குறை நிர்வாக மாவட்டத்தில், மேற்கு பஸ்துன் கோறளைக் காரியாதிகாரியின் பிரிவில், கிராம சேவக பகுதி புனர் நிர்ணயம் செய்தல்

1970 மார்ச்சு மாதம் 15 ந் திகதியிலிருந்து களுத்துறை நிர்வாக மாவட்டத்தில், மேற்கு பஸ்துன் கோறளைக் காரியாதிகாரியின் பிரிவில், 799 ம் இலக்க புஹும்புகொட கிராமசேவக பிரிவு, 799 ம் இலக்க புஹாம்புகொட சக 799எ ம் இலக்க எலதுவ எனும் கிராமசேவகர் பகுதிகள் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளதைப் பொது சனத்தின் அறிவிப்புக்காக இதனுல் வெளிப்படுத்தப்படுகிறது.

(அ) கீழ்வரும் கிராமங்கள் 799 ம் இலக்க புஹாம்புகொட கிராம சேவகப் பிரிவுக்கு உள்ளடங்கும்.
புஹாம்கொட

(ஆ) கீழ்வரும் கிராமங்கள் 799 எ ம் இலக்க எலதுவ கிராமசேவகப் பிரிவுக்கு உள்ளடங்கும்.
எலதுவ, கல்பொத்தவில

2. இந்த கிராமசேவகர்களின் பகுதிகள் அடங்கும் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், கிராமசபை நீதிமன்றம், பொலிஸ் நிலையம், பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் பிரிவு, உள்ளூராட்சி தேர்தல் பகுதி, பாராளுமன்ற தேர்தல் மாவட்டம் என்பன பொது அறிவித்தலுக்காகக் கீழே தரப்பட்டுள்ளது.

| கிராமசேவக பிரிவு | மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் | கிராமசபை நீதிமன்றம் | பொலிஸ் நிலையம் | பிறப்பு இறப்பு, விவாக பதிவாளர் பகுதி | உள்ளூராட்சி பகுதி | தேர்தல் மாவட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 799. புஹாம்புகொட | .. மத்துகம | .. பய்யாகல | .. தொடங்கொட | .. தொடங்கொட | .. தொடங்கொட கிராம சபை | .. மத்துகம |
| 799எ. எலதுவ | .. மத்துகம | .. பய்யாகல | .. தொடங்கொட | .. தொடங்கொட | .. தொடங்கொட கிராம சபை | .. மத்துகம |

லீல் குணசேகர,
களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபர்.

களுத்துறை கச்சேரி,
1970 ம் ஆண்டு பெப்ருவரி மீ 27 ந் வ.
8–46

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கபபட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிபபிடபபட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்பபிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாச்சு | .. | 5.3.70 | வியாழன் | .. | 27.2.70 | வெள்ளி | .. | ந. ப. 12.00 |
| | | 13.3.70 | வெள்ளி | .. | 5.3.70 | வியாழன் | .. | பி. ப. 3.30 |
| | | 20.3.70 | வெள்ளி | .. | 13.3.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 26.3.70 | வியாழன் | .. | 19.3.70 | வியாழன் | .. | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. | பி. ப. 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. | பி. ப. 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. | பி. ப. 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. | பி. ப. 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| யூன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. | பி. ப. 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. | ந. ப. 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. | ந. ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிபபிக்கப்பெற்றது.